

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 42 ● 08.09.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ✉ ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## உணர்வெழுச்சியுடன் பங்கேற்க வாரீர்

தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் அழைப்பு

## எழுக தமிழ் பேரணியில் அனைத்து உறவுகளும் எழுச்சியுடன் பங்கேற்க வேண்டும்

தமிழகத் தலைவர்கள் அறிக்கை








## எழுக தமிழ் ஏன்?

நிலாந்தன்

## அகதியாய் அலைவுறும் ஈழத் தமிழினம்

தீபச்செல்வன்



## இனவழிப்பை மேற்கொள்ளும் சிறீலங்கா அரசுக்கு துணை போகின்றதா சுவிஸ் அரசு

ஐ.நா மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிசா பீரிஸ் குற்றச்சாட்டு

# எழுக தமிழ் பேரணியில் பேதமின்றி ஒவ்வொரு தமிழரும் பங்கேற்றல் அவசியம்

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கோரிக்கை

எதிர்வரும் செம்டம்பர் 16ஆம் நாள் நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் தாயகத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் பேதமின்றி பங்கேற்பது அவசியம் என்று தமிழ்த்தேசிய புத்தி—ஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் நாள் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி யாழ்.நல்லூர் கந்தன் முன்றலில் ஆரம்பித்து முற்றவெளிவரையில் முன்னெடுக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அங்கு பிரதான மக்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த எழுச்சிப்பேரணிக்கான முன்னாயத்தப் பணிகளும் பரப்புரைகளும் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் வெகுவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த முன்னாயத்தப் பணிகளுக்கு முட்டுக்கட்டையிட்டு தடுப்பதற்கு தமிழ்த் தேசிய அரசியல் நீக்கத்திற்கு துணைபோகும் தரப்புக்கள் முனைந்து வருகின்றன.

அதற்காக பல்வேறு மாற்றுக்கருத்துக்களை கூறி எழுக தமிழ் எழுச்சிப்பேரணியை முடக்குவதற்கான சூட்சும நடவடிக்கைகளிலும் சிங்களத்திற்கு துணைபோகும் தரப்புக்களும், தமிழ்த் தேசிய நீக்கத்துக்கு துணைபோகும் தமிழ்த் தரப்புக்களும் முயற்சிகளை எடுத்து




வருகின்றன. ஆகவே அந்த விடயங்களில் எமது உறவுகள் அவதானமாக இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகின்றது. அதேநேரம், தாயகத்தில், முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நிகழ்த்திய அகந்தையோடு பேரினவாத சக்திகள் தமது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக சிங்கள பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

இராணுவ நிலைகளை அதிகரித்தல் அதனைச் சுற்றி பௌத்த விகாரைகளையும், சிங்களக் குடியேற்றங்களையும் நிறுவுதல், எமது வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பண்பாட்டு மையங்களை இல்லாமலாக்குதல், அபிவிருத்திகளின் பேரால் பூர்வீக நிலங்களை சூறையாடுதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் வனபரிபாலனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி திட்டம் போன்றவற்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சிங்கள, பௌத்த விரிவாக்கத்தை நிலைநிறுத்த ஏதாவது கிராமங்களில் ஒரு சிங்களரோ அல்லது பௌத்த விகாரையோ இருப்பின் அதனை தமிழ்ச் சிங்கள கிராமங்கள் என அடையாளப்படுத்தும் செயற்பாடுகளும் ஆதிக்கச் சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி

தொடர்ச்சி 4ம் பக்கம்

# இனவழிப்பை மேற்கொள்ளும் சிறீலங்கா அரசுக்கு துணை போகின்றதா சுவிஸ் அரசு

### ஐ.நா மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிசா பீரிஸ் குற்றச்சாட்டு



ஐ.நா மனித உரிமைக்கான 42வது கூட்டத் தொடர் செப்டெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகின்ற நிலையில் இனவழிப்புக்குள்ளாகி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்கான விசா அனுமதி சரியான காரணங்களின்றி இலங்கைக்கான சுவிஸ் தூதுவராலயத்தால் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருவதாக ஐ.நா மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிசா பீரிஸ் குற்றம் சுமத்தி உள்ளார். 2009 இல் தமிழினம் முள்ளிவாய்க்கால் பகுதி வரை தொடர்ச்சியான இனவழிப்புக்குள்ளாகிய போது பாதிக்கப்பட்ட எங்களது மக்களை பாதுகாக்க வேண்டிய ஐ.நா, அந்த மக்களின் கண்ணீரையும் கதறல்களையும் புறந்தள்ளி தனது ஊழியர்களுக்கு பாதுகாப்பில்லை என்று கூறி எங்கள் பகுதிகளிலிருந்து வெளியேறி இருந்தது. அதுவும் இலங்கை அரசின் இனவழிப்புக்கு மறைமுகமாக அங்கீகாரம் வழங்குவதாகவே அமைந்திருந்தது. இன்று ஐ.நா மனித உரிமை மன்றத்தில் பாதிக்கப்பட்ட எங்களது மக்களின் குரல் ஒலிப்பதற்கும் கடுமையான முட்டுக்கட்டை போடப்படுகின்றது. 2015க்கு பின்பு தங்களது நலன்களுக்கு சாதகமான அரசாங்கம் சிறீலங்காவில் அமைந்ததன் பின்னரே இந்த ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பாதிக்கப்பட்ட எங்களது மக்கள் பங்குபற்றுவதற்கான விசா அனுமதி சுவிஸ் தூதுவராலயத்தால் சரியான காரணங்களின்றி



தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அதேவேளை இனவழிப்பை செய்த இராணுவத்தினர் பெருமளவில் சிங்கள அமைப்புக்களுக்கூடாக




ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தங்கு தடையின்றி பங்கு பற்றி வருவதாகவும் இந்த இராணுவத்தினர் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதாகவும் நிசா சுட்டிக்காட்டி உள்ளார்.

ஐ.நாவின் மனித உரிமைகள் மையமாக ஜெனீவா இயங்குகின்ற நிலையில் சுவிஸ் அரசாங்கம் இனவழிப்புக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட எங்களது மக்களின் குரல் ஐ.நா மன்றத்தில் ஒலிப்பதற்கும் அநீதிக்குள்ளான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் ஐ.நா மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிசா பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மகள் திருமணத்திற்காக வெளியே வர முருகனும் மனு

முருகன் தனது மகள் திருமண ஏற்பாடுகளை மேற்கொள்ள ஒருமாதம் பிணை கேட்டு சிறைத்துறைக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளான நளினி வேலூர் பெண்கள் ஜெயிலிலும், அவரது கணவர் முருகன் ஆண்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களது மகள் ஹரித்ராவின் திருமண ஏற்பாடுகளை செய்ய நளினி பிணை கேட்டு விண்ணபத்திருந்தார். அதன் அடிப்படையில் அவருக்கு ஐகோர்ட்டு ஒரு மாதம் பிணை வழங்கியது. கடந்த ஜூலை மாதம் 25—ந்தேதி பிணையில் வந்த நளினி வேலூர் சத்துவாச்சாரி ரங்காபுரம் புலவர் நகரில் உள்ள ஒரு வீட்டில் தங்கி உள்ளார்.



கடந்த மாதம் 25—ந்தேதியுடன் நளினியின் ஒருமாத கால பிணை முடிவடைய இருந்தது. இதற்கிடையே அவர் சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் பேரில் மேலும் 3 வாரங்கள் பிணை நீட்டிக்கப்பட்டது. இந்த நிலையில் முருகன் தனது மகள் திருமண ஏற்பாடுகளை மேற்கொள்ள ஒருமாதம் பிணை கேட்டு சிறைத்துறைக்கு மனு அனுப்பி உள்ளார். இதுகுறித்து அவரது வக்கீல் புகழேந்தி கூறியதாவது... மகள் திருமண ஏற்பாடுகளை செய்ய நளினி சத்துவாச்சாரியில் தங்கியுள்ளார். அவரது கணவர் முருகனும் தற்போது பிணை கேட்டு சிறைத்துறைக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார். அவர் பிரம்மபுரத்தில் தங்கி திருமண ஏற்பாடுகளை மேற்கொள்ள உள்ளதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றார்.

# சஹ்ரான் காசிமின் மடிக் கணினி இலங்கைப் பொலிஸாரிடம்தான்



ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் காசிமின் மடிக்கணினி, அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனமான எஃப்.பி.ஐ இன் பொறுப்பில் உள்ளதாக வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த மடிக் கணினி குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பிலேயே உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன்குணசேகர தெரிவித்துள்ளார். அம்பாறை பகுதியில் இருந்து சஹ்ரான் பயன்படுத்திய மடிக்கணினி கண்டெடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த மடிக் கணினியில் இருந்து விசாரணைகளுக்கு தேவையான முக்கிய சாட்சியங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் காவல்துறை ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# சிறீலங்கா இராணுவ வீரர் தூக்கிட்டு தற்கொலை

பிலியந்தலை, பட்டுவந்தர பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவ வீரர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். நேற்றைய தினம் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் அநுராதபுரம், எலகஹபத்துவ பகுதியை சேர்ந்த 31 வயதான நபர் என காவல்துறை ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. குறித்த இராணுவ வீரர், பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றியவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எழுக தமிழில் இணைவோம்

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் வெறுமனே பொருளாதாரத் தேவைகளாகக் காட்டப்படும் நிலையில், அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளை வெளிக்கொணர மற்றொரு எழுக தமிழுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. ஜெனீவா தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டு — கம்பரெலியா மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தலாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணிந்து நிற்கும் அவலமான பின்னணியில் காலத்தின் தேவையாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு இன்றைய தேவை என்ன? அவர்களுடைய அபிலாஷைகள் என்ன? இன்று அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்ன என்பதை சிறீலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்த வேண்டிய அவசரமான ஒரு தேவை இப்போதுள்ளது. தமிழ் மக்களுடைய அரசியலை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு இது போன்ற ஒரு மக்கள் எழுச்சி அவசியம். காலத்தின் தேவையாகவுள்ள இந்த எழுச்சியில் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ளது.

தாயகத்தில் தமிழ் மக்கள் பேரவை இந்த எழுச்சியை ஏற்பாடு செய்திருக்கும் அதேவேளையில், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இது போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தாயகத்திலுள்ள மக்களும், புலம்பெயர்ந்திருக்கும் மக்களும் இணைந்து பயணிக்க வேண்டிய அவசியத்தின் பிரதிபலிப்பு இது. கட்சி அரசியல் சாராமல் சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்யும் இந்தப் பேரணியில் பங்கேற்று எமது அபிலாசைகளை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

எழுக தமிழ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தருணம் முக்கியமானதாகும். ஜனாதிபதித் தேர்தலுக்கான தயாரிப்புக்கள் சூடுபிடித்துள்ளன. தமிழ் மக்களுடைய கோரிக்கை என்ன என்று தெரியாமல், தேசியக் கட்சிகளுடன் பேரம் பேசுவதில் சில தமிழ்த் தரப்பினர் இறங்கியுள்ளார்கள். அவர்களுக்கு எமது மக்களின் அபிலாஷைகள் இவைதான் என்பதை உணர்த்த வேண்டிய தேவை மீண்டும் ஏற்பட்டுள்ளது. எழுக தமிழ் அதனை உணர்த்தப் போகின்றது.

இரண்டாவதாக, ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 42 ஆவது கூட்டத் தொடர் இந்த வாரம் ஆரம்பமாகின்றது. ஜெனீவாவில் தமிழத் தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன என்பதை நாமே மறந்துவிட்டோம். ஒப்புக்கொண்ட எதையுமே சிறீலங்கா செய்யவில்லை. இதனை சர்வதேச கவனத்துக்கு மீண்டும் கொண்டுசெல்லும் தேவை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கட்சிகளையும் மக்களையும் சரியான பாதையில் நெறிப்படுத்திப் போராட்டப் பாதையை செம்மைப்படுத்துவதற்கு சிவில் சமூகம் மிகவும் காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளவேண்டி இருக்கின்றது. சந்தடி இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்துக்கு எதிராக எமது மக்களின் எதிர்ப்புக்களை வலுவூட்டுவது காலத்தின் கட்டாயமாகும்.

எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு, சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் ஏற்பட்டுள்ள தேங்கு நிலை, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறாமை, இராணுவ மயமாக்கல் மற்றும் மீள்க்குடியமர்வு போன்ற ஆறு விடயங்கள் தொடர்பில் நியாயம் கோரி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த பேரணி நடைபெறும்.

போர் முடிவுக்கு வந்த நிலையில் மக்கள்மயப் போராட்டங்கள் மூலமாக மட்டுமே எமது பிரச்சினைகளை நாம் வெளிக்கொணர முடியும். கட்சி சார்ந்த அரசியல் முரண்பாடுகளைத் தவிர்த்து தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த அபிலாசைகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் அனைவரும் இந்தப் பேரணியில் பங்கேற்று இந்தக் காலகட்டத்தில் தனக்குள்ள பொறுப்பை வெளிப்படுத்த வேண்டும். தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் எழுக தமிழ் நிகழ்வுகளை நடத்தி ஒட்டுமொத்த தமிழினத்தின் அபிலாசைகள் இதுதான், நமது தேவைகள் இவை தான் என்பதை பலப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தில் மிகவும் அவசியமாகும்.

2ம் பக்க தொடர்ச்சி முன்னெடுக்கப்படுகின்றன. கட்டமைக்கப்பட்ட ரீதியில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பினையே பிரதானமா ஆட்சியாளர்கள் கொண்டுள்ளமையால் தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்த காலத்தைவிடவும், அதற்கான தேவையையும், பரப்பையும், நியாயத்தையும் தற்போது மென்மேலும் அதிகரித்துள்ளனர். தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதிகள் காலடியில் சிக்குண்டு கிடப்பதற்குரிய வழிவகைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர் தயாகம் சிதைவுற்றுள்ளது. தமிழரின் குடித்தொகை வீழ்ச்சியடையச் செய்யப்பட்டு குடிப்பரம்பல் மாற்றப்பட்டும் துணிகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் இருந்து கிழக்கு பிரிக்கப்படுவதற்கான முயற்சிகளுக்கு அப்பால் கிழக்கு பேரினவாதிகளின் பிடிக்குள் சிக்கவைக்கப்பட்டும், சகோதர முஸ்லிம் இனத்தினுள் காழ்ப்புணர்வை அதிகரிக்கச் செய்யும் அம்மாகாணம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

தோற்கடிக்கப்பட்ட மக்கள் கூட்டம் தானே என்ற மனநிலையுடன் செயற்படும் சிங்கள பேரினவாதிகள், தமிழர் தாயகத்தினை சில தமிழ் அரசியல்வாதிகளை பயன்படுத்தி பெருந்தேசிய அரசியற் சகதிக்குள் மூழ்கடிக்க முயல்கின்றனர்.

மக்கள் தாமாகவே தம் மீதான ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக தாமே தலைமையேற்று போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டங்கள், போராட்டங்களாக தொடர்ந்தபோதும் பாரமுகமே நீடிக்கின்றது. தாயகத் தமிழ் உறவுகள் நம்பிக்கையற்ற நடைபிணங்களாய் அரசியற் பாலைவனத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே தொடர்ந்தும் இந்த நிலைமைகள் நீடித்தால் தாயகத்தில் தமிழர்களின் இருப்பும், எதிர்காலமும், இழைக்கப்பட்ட அநீதிக்கான பொறுப்புக்கூறலும், ஒட்டுமொத்த தேசிய இனப்பிரச்சினைக்கான அபிலாசைகளை நிறைவேற்ற வல்ல தீர்வும் கானல் நீராகிவிடும்.

எனவே இந்த விடயங்களை, தமிழ் தலைவர்களுக்கும், சிங்கள தேசிய வாதிகளுக்கும், சர்வதேசத்திற்கும் இடித்துரைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்காக எழுக தமிழ் எழுச்சிப்பேரணியில் உணர்வெழிச்சியுடன் பங்கேற்று எம் நியாயத்தை, நீதியை, உரிமையை, உலகறியச் செய்வோமாக. என்றுள்ளது.

## சனாதிபதித் தேர்தலில் 12 கட்சிகள் களத்தில்-மகிந்த தேசப்பிரிய



இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, 12 அரசியல் கட்சிகளும், 2 சுயேட்சைகளும் விருப்பம் வெளியிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளதாக, 12 அரசியல் கட்சிகள் எழுத்து மூலம் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளன. அத்துடன், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், சுயேட்சை வேட்பாளராகப் போட்டி யிடவுள்ளதாக ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தல் குறித்த ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாக, போட்டியிட விரும்பும் கட்சிகளை முன்னரே தகவல் தருமாறு தேர்தல்கள் ஆணைக் குழு கோரி—யிருந்தது.

## கடைசி நேரத்தில் அதிரடி முடிவு : சந்திரிகா சோதிடம்



2015ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலில், கடைசி நேரத்தில் பொதுவேட்பாளர் அறிவிக்கப்பட்டதைப் போன்று, இந்த சனாதிபதி தேர்தலிலும் இறுதி நேரத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதிரடி காட்டும் என முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் நான் பங்கேற்றிருந்தேன். அந்தக் கட்சி எனது தாய் வீடு. அந்தக் கட்சியிலுள்ள களைகளை அகற்ற வேண்டும்.

அந்தக் கட்சிக்கு விசுவாசமானவர்களுடன் தொடர்ந்தும் இருப்பேன். சிறீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் சனாதிபதி தேர்தல் தொடர்பில் இப்போது முடிவை வெளி—யிடாது. 2015ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் இறுதி நேரத்தில் இடம்பெற்றதைப் போன்று அதிரடியான முடிவை எடுக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

# அமேசன் காட்டுத் தீயும் ஈழத்தமிழர்களான நாமும்!



பற்றி எரிகிறது அமேசன்

அமேசன் காட்டுத் தீ இன்று உலகின் பேசு பொருள். வரவேற்கத்தக்க விடயம். இயற்கையுடனும் சுற்றுச்சூழல் பாதுகாப்புடனும் மோசமாக உரசிப் பார்க்கும் தலை வர்களும், அதன் தாக்கத்தின் பின் விளைவுகள் குறித்த அவ்வித அறிவோ அன்றி அது குறித்த எவ் வித கரிசனையோ அற்ற ஒரு பெரும் பகுதி மக்கள் கூட்டமோ, உள்ள உலகில் இவ்விடயம் எவ்வளவு தாக்கம் செலுத்தும் விடயமாக மாற்றம் பெறும் என்பதே கேள்வி... காட்டை அழித்தால் நாங்களும் அழிந்து போவோம் என்பதை தாங்கள் அழி யும் வரை, இந்த மக்கள் கூட்டம் உணரப் போவதில்லை என்பதே கசப்பான உண்மை. எனினும் எதிர்பாராத வட்டாரங்களிலான முயற்சி பெரும் நம்பிக்கை தருகிறது. ஆபிரிக்காவை ஒரு பெரும் பச்சை பெரும் சுவராக மாற்ற அங்குள்ள அரசு களும் மக்களும் முனைந்து நிற்பது பெரும் பாராட்டுதலுக்கு உரியது மட்டுமல்ல, மிகவும் வரவேற்று வலுப்படுத்த வேண்டிய விடயமாகும். அதிலும் தம் உரிமைகளுக்காக போரா டிய மக்கள் கூட்டங்கள், இதில் முதன்மையாக இருப்பது மேலும் பெருமகிழ்ச்சி தருகிறது.

ருவண்டா, எதியோப்பியா, எரித்திரியா என முன்னணியில் உள்ளன. ருவண்டா 30 சதவீத நிலப்பரப்பை காட்டு வனமாக மாற்ற முனைந்து நிற்கிறது. எதியோப்பியா சமீபத்தில் ஒரு நாளில் 35 கோடி மர நடு கையைச் செய்து உலக சாதனை படைத்துள்ளது.. ஒரு தேசத்தின் மண்வளம், நீர்வளம், பயிர்ச் செய்கை வளம், இயற்கை வேளாண்மை எனப் பலவற்றில் அத்தேசத்தின் மரவளம் முதன்மையாகிறது என்பதாலேயே, ஈழ விடு தலை வரலாற்றில் இதுவும் முதன்மையாகக் கொள்ளப்பட்டு மரநடுகை வன்னியயங் கும் முதன்மைப்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி அத்துமீறிய மரவெட்டல், தடுக்கப்பட்டு அதற்கான தண்டனைகளும் கடுமையாக்கப்பட்டதுடன், இதற்கான தனித்துவமான நிர்வாக அலகு உருவாக்கப்பட்டு இவ்விடயத்தில் மிகவும் இறுக்கமான போக்கு கடைப்பிடிக்கப்பட்டது. மிகவும் வறட்சியான பகுதியை இலங்கைத் தீவில் கொண்டுள்ள தமிழர் தாயகப் பகுதிகளில், இது குறித்த பார்வையும் முன்னெடுப்பும் முக் கியமானது. ஆனால் 2009இற்கு பின்னர், இவ்வாறு வளர்த் தெடுக்கப்பட்ட மரங்களே முதலில் வெட்டி ஆக் கிரமிப்பாளர்களால் விற்பனை செய்யப்பட் டன. ஆனால் எம்மி டம் இருந்து எவ்வித எதிர்ப்பும் எழவில்லை. அதேவேளை எமது எதிர்காலத்தின் முக்கிய தேவை யான தொடர்ந்த மரவளர்ப்பு விவகாரம், நீர்த்துப் போன விடயமா கியுள்ளது. ஆபிரிக்க உரிமைப் போராட்ட மக் கள் தங்கள் வாழ்வியல் சிறக்க கற்ற பாடங்களை, உணர்வுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கையில் நாம் மாத்திரம் ஏன் எல்லாவற்றிலும் நீர்த்துப் போகிறோம்?

நேரு குணரட்ணம்



தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னியில் வளர்த்த தேக்கங்காடு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது

# தமிழீழ உறவுகளே...விழித்தெழுங்கள்!

## பேரவையின் பலம் பெருக்கி மக்கள் சக்திப் பெருமலையாய் பேரணியில் திரண்டெழுந்து அடிமை விலங்குடைத்தெறிவோம்.

தமிழ்மகன்

தாயகத்து உறவுகளே, தமிழினத்தின் தலைவர்களே...
புலம்பெயர்ந்த உறவுகளே உறவுகளின் தலைவர்களே
வருங்காலச் சந்ததியே... இளைஞர்களே... யுவதிகளே...
தமிழ்மக்கள் பேரணியில் பெருமலையாய்த் திரண்டெழுந்து
அடிமை விலங்குடைத்தெறிந்து தன்னாட்சி வென்றெடுப்போம்

தேசியத் தலைமகனின் ஆண்மைமிகு வீரியத்தால்
தெய்வீகத் தன்மைமிகு தியாகிகளின் அர்ப்பணிப்பால்
தாயகத்து தமிழ் மக்கள் இணைந்தளித்த குருதியினால்
மீட்டெடுத்த தமிழ்த்தேசம் கயவர்களின் சூழ்ச்சியினால்
பகைவர்வசம் வீழ்ச்சியுற்றுப் பலமிழக்க நேர்ந்தாலும்
தளராத உறுதியுடன் அச்சமற்ற உள்ளத்துடன்
பேரணியாய்த் திரண்டெழுந்து ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்

அழிவுளாழ்ந்து சொத்திழந்து உறவுகளைப் பறிகொடுத்து
சொந்தமண்ணைக் கைநெகிழ்ந்து நிர்க்கதியாய் அலைந்தபோதும்
மனமுடைந்து உணர்ச்சியற்று செயலிழந்து கலங்கலாமா?
சிங்களத்தின் இனவாதச் சகதிக்குள் கரைந்தழியும்
தாயகத்தை தமிழினத்தை மீட்டெடுக்கத் திரண்டெழுவோம்

தமிழினத்தின் ஆன்மீகத் தலைவன் எங்கள் தந்தைசெல்வா
முன்மொழிந்த தன்னாட்சித் தீர்வொன்றே இலட்சியமாய்
ஒரு நாடு இரு தேசம் எனும் கொள்கைப் பற்றுடனே
ஒற்றையாட்சித் திட்டத்தால் நாமழிந்த வரலாறு
மீண்டுமெமை அழிக்காது தன்னாட்சிக் கொள்கைக்காய்
ஒட்டுமொத்தத் தமிழர்களும் பேரணியாய்த் திரண்டெழுந்து
சாத்வீகப் போர்தொடுத்து அடிமை விலங்குடைத்தெறிவோம்

பேரவையின் தோற்றம் எங்கள் முன்னோரின் தவப்பயனே
தமிழினத்தின் சக்தியினிப் பேரலையாய் மேலெழும்பும்
எம்மவரின் மிதவாதம் மண்மீட்டுக் கொடுக்காது
இராணுவத்தை அகற்றுவதற்குப் போராட்டம் தொடரவேண்டும்
பேரணியின் பலமொன்றே திரண்டெழுந்து இனம் மீட்கும்



பாழ்குழியில் வீழ்ந்தெங்கள் தமிழ் மக்கள் அனுபவிக்கும்
அவலங்கள் கண்டபின்பும் மனமாற்றம் அடையாது
உணர்வற்றுச் செயலற்றுப் பிரிந்துநிற்கும் தமிழினமே
சிங்களவர் கடைப்பிடிக்கும் ஒற்றுமையை நோக்குங்கள்
பேரணியின் எழுச்சியிலே பெருமலையாய் திரண்டெழுங்கள்
குரல்வளையை நெரிக்கின்ற சக்திகளுக்கு அஞ்சாது
உரம்கொண்ட நெஞ்சத்தோடு உரிமைக்குப் போர்தொடுப்போம்
பேரவையின் திரட்சி ஒன்றே தமிழினத்தை இரட்சிக்கும்

# ஈழத் தமிழர்களின் ஆதரவுக் குரல் ஓய்ந்தது சட்டத்தரணி ராம் ஜெத்மலானி காலமானார்!

ஈழத் தமிழர்களுக்காக தேவையேற்படின் உச்ச நீதிமன்றத்திலும் வாதாடுவேன் என்று தெரிவித்தது மாத்திரமன்றி, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேக நபர்களுக்காக தொடர்ச்சியாக வாதாடி மூவரை தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்றிய இந்தியாவின் சிரேஷ்ட சட்டத்தரணி ராம் ஜெத்மலானி காலமானார். கடந்த ஓராண்டு காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த சட்டத்தரணி ராம் ஜெத்மலாணி தன்னுடைய 95 ஆவது வயதில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) உயிரிழந்துள்ளார். உச்ச நீதிமன்ற மூத்த சட்டத்தரணியும் முன்னாள் மத்திய அமைச்சருமான ராம் ஜெத்மலானியின் இறுதிச் சடங்கு லோதி மயானத்தில் இன்று மாலை நடைபெறவுள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் பிறந்த ராம் ஜெத்மலானி, இந்தியா— பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் மும்பைக்கு குடிபெயர்ந்தார்.



மேலும் வாஜ்பாய் அமைச்சரவையில் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராகவும் இருந்துள்ளார். மிக இளம் வயதிலேயே (18 வயது)சட்டத்தரணியாக தன்னுடைய பயணத்தை ஆரம்பித்த அமரர் ராம் ஜெத்மலானி, இந்தியளவில் பரபரப்பை ஏற்படுத்திய பல்வேறு வழக்குகளில் ஆஜராகி தன்னுடைய திறமையை வெளிப்படுத்தியிருந்தார். குறிப்பாக ராஜீவ் கொலை வழக்கில் சந்தேக நபர்களுக்கு எதிராக ஆஜராகியிருந்ததுடன், ராம் ஜெத்மாலினியின் வாதத் திறமையினால் தூக்குத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருந்த முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவரின் தண்டனைகளும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருந்தது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை. கோபாலசாமியினால் எழுதப்பட்ட ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாக விவரித்த நூலையும் இறுவெட்டையும் புதுடெல்லியில் வெளியிட்டு உரையாற்றிய அமரர் ராம் ஜெத்மலானி, ஈழத்தமிழர்களுக்காக தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று தெரிவித்ததுடன் தேவையேற்படின் உச்ச நீதிமன்றம் சென்றும் வாதாடுவேன் என்று தெரி—வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# உணர்வெழுச்சியுடன் பங்கேற்க வாரீர்!

## தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் அழைப்பு

### காலத்தின் கட்டாயமான பேரணிக்கு அரசியல் சாயம் பூச வேண்டாம்

**தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் நவநீதன்**



தமிழ் மக்களின் வாழ்வுரிமை சார்ந்த கோரிக்கைகளை முன்னிறுத்தியும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை கண்டறிவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையிலும் நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாயமானதாகும்.

தற்போதைய சூழலில் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக் குறியாகிக்கொண்டு செல்கின்றது. பௌத்த ஆக்கிரமிப்புக்களும், திட்டமிட்ட வகையில் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிப்பும் வவுனியாவிலும், முல்லைத்தீவிலும், மன்னாரிலும் மற்றும் கிழக்கிலும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வேகத்தில் சிங்கள, பௌத்த ஆக்கிமிப்பு நடைபெறுமானால் அடுத்துவரும் சொற்ப காலப்பகுதியில் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் வடகிழக்கு என்று கூறமுடியாத நிலைமை தோற்றுவிக்கப்படும் பேராபத்து ஏற்படுவது திண்ணமாகின்றது. ஆகவே முதலில் இருப்பினை பாதுகாப்பது அவசியமானது. இதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகின்றது. அந்த அடிப்படையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது, தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக முன்னின்று செயற்பட வேண்டும்.

எந்தவிதமான அரசியல் சாயங்களும் இன்றி தமிழ்த் தேசிய சிந்தனையின் பால் செயற்படும் அனைத்து அரசியல் தரப்பினர், சிவில் சமூகத்தினர், தொழிற் சங்கங்கள், மக்கள் இயக்கங்கள், மாணவர் அமைப்புக்கள் என அனைத்து தரப்பினரும் எந்தவிமான பேதமுமின்றி ஒருங்கிணைத்து எழுக தமிழ்ப் பேரணியை முன்னெடுக்க வேண்டியது காலத்தால் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

### வடகிழக்கில் உள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்

**தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் வசந்தராசா**



எழுக தமிழ் எழுச்சி பேரணியானது எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், எமக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான தீர்வுகளையும், பொறுப்புக்கூறலையும், எமது எதிர்கால இருப்பினையும், பூர்வீக வாழ்விடங்களையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் அழுத்தமாக வெளிப்படுத்துவதையே முதன்மையாக கொண்டுள்ளது. இந்தப்பேரணி கடந்த காலங்களில் வடக்கிலும், கிழக்கிலும் நடத்தப்பட்டிருந்த நிலையில் அதன்போது எம்மால் வலியுறுத்தப்பட்ட, முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எமக்கு எவ்விதமான நியாயங்களும் வழங்கப்படாது தொடர்ச்சியாக மறுதலிக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே மீண்டும் நாம் அழுத்தமான செய்தியொன்றை சர்வதேசத்திற்கு வழங்க தலைப்பட்டிருக்கின்றோம்.

ஆகவே அரசியல் சாயங்களை களைந்து பேதங்களை மறந்து தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை விடுத்து எமது மக்களின் விடியலுக்காகவும் அவர்களின் போராட்டங்களுக்கும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெறுவதற்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து மாபெரும் எழுச்சியை சர்வதேசத்திற்கு காட்ட வேண்டும். எழுக தமிழில் தமிழர்களின் ஒன்றிணைவு ‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ என்பதற்கிணங்க தென்னிலங்கை சிங்கள பேரினவாத சக்திகளுக்கு செய்தியைச் சொல்வதாக அமையவேண்டும்.

### பேராபத்தை தடுப்பதற்கு பேதமின்றி அணிதிரளவும்

**யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பபிலராஜ்**



தமிழ் மக்களின் எதிர்கால பாதுகாப்பினையும், பூர்வீக மண்ணில் வாழும் உரிமையை உறுதிப்படுத்தி நிரந்தர இருப்பினை உறுதி செய்வதற்காகவும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் ஒவ்வொரு தமிழ் மகனும் இதயசுத்தியுடன் பங்கேற்க வேண்டியது இன்றியமையாதவொன்றாகின்றது.

70ஆண்டுகளாக எத்தனையோ வடிவங்களில் நாம் போராட்டங்களை மேற்கொண்டிருக்கின்ற போதும் எமது தேசத்திற்கு விடுதலையோ எமது மக்களுக்கு விமோசனமே இன்றுவரையில் கிடைக்கவே இல்லை. 2015ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் சனநாயக வெளிச்சூழலொன்று ஏற்படுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டாலும் சிங்கள, பௌத்த பெரும்பான்மைவாத சிந்தனைகளோ, செயற்பாடுகளோ மாறவே இல்லை. சனநாயக நிலைமைகள் இருப்பதாக வெளித்தோற்றத்திற்கு காண்பிக்கப் பட்டாலும், தழிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலான தீர்வுத் திட்டத்தினை வழங்குவதற்கோ, இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை செய்வதற்கோ, இல்லை தொலைந்த உறவுகளையும், சிறையில் வாடும் உறவுகளையும் மீட்பதற்காக போரடிக்கொண்டிருக்கின்ற உறவினர்களின் உணர்வுகளையோ ஒரு பொருட்டாக எடுத்ததாகவே இல்லை. மாறாக, எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்வதற்கான திட்டமிடல்களே நாளாந்தம் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே இந்த நிலைமைகளை தொடரவிட்டு வேடிக்கை பார்ப்போமானால் நிச்சயமாக எதிர்காலம் இருள் மயமாகிவிடும். ஆகவே உடனடியாக சர்வதேசம் இதற்கான பதிலை அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுச்சிப்பேரணியில் நாம் பங்கேற்போம். அதுமட்டுமின்றி எந்தவிதமான பேதங்களுகமின்றி முரண்பாடுகளை மறந்து தன்னலமின்றி அனைவரும் பேரணியில் ஒன்றிணைய வேண்டும் என்றும் நாம் கோரி நிற்கின்றோம்.

### எமக்கான நீதியை வழங்ககோரி எழுச்சிபேரணியில் பங்கேற்போம்

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கனகரஞ்சினி**



எமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி வருடக்கணக்கில் வீதியோரத்தில் போராடிக் கொண்டிருக்கின்றோம். சிறீலங்கா அரசாங்கம் எமது போராட்டத்தினை கருத்திற் கொண்டதாக இல்லை. மாறாக எம்மையும், சர்வதேசத்தினையும் ஏமாற்றுவதற்கான நடவடிக்கைகளையே செய்துவருகின்றது. குறிப்பாக, எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான பொறிமுறைகளை அமைப்பதற்குப் பதிலாக காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி அலுவலகத்தினை அமைத்து எமது போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலான ஏமாற்றுக் கருத்துக்களை பிரச்சாரம் செய்கின்றது. சர்வதேசமும் சிறீலங்கா அரசாங்கத்தின் நயவஞ்சக நாடகத்தினை உணர்ந்து கொள்ளத்தவறி அதற்கு பொறுப்புக்கூறுவதற்கான கால அவகாசத்தினை வழங்கியுள்ளது. தற்போதைய சூழலில் சிறீலங்கா அரசாங்கம் காணமலாக்கப்பட்ட எமது உறவுகள் பற்றி எந்தவிமான கருணையையும் கொண்டிருக்கவில்லை என்பது அப்பட்டமாக வெளிப்பட்டாகிவிட்டது. மேலும் தமது உறவுகள் மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் போராடிக்கொண்டிருக்கும் உறவினர்கள் தமது இறுதி ஆசை கூட நிறைவேறாது உயிர்துறக்கும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது. இவ்வாறான நிலையில் உடனடியாக எமது சொந்தக்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றே நாம் தொடர்ச்சியாக கோரி வருகின்றோம்.

எமது போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற அதேநேரம் நாம் உட்பட எமது இனம் எதிர்நோக்கியுள்ள ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கும் சர்வதேசம் உடனடியாக தலையீடு செய்து தீர்வு பெற்றுத்தரவேண்டும் என்பதை வலியுறுத்தி எழுச்சிப் பேரணியில் பங்கேற்று வலியுறுத்தவுள்ளோம்.




# உணர்வெழுச்சியுடன் பங்கேற்க வாரீர்!

## தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் அழைப்பு

### கிழக்கு பல்கலை மாணவர்கள் பூரண ஒத்துழைப்பை அளிப்பர்



**கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசார பீட மாணவர் ஒன்றிய தலைவர் த.புவனராஜ்**

தமிழர்களின் தாயகத்தில் சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனையில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் ஆக்கிரமிப்புக்களும், அடக்கு முறைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கட்டமைக்கப்பட்ட இந்த செயற்பாடுகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போரின் பின்னரான சூழலில் இந்த ஆக்கிரமிப்புக்கள் மிகவேமாக முன்னெடுக்கப்பட்டு தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்தாது விட்டால் கிழக்கில் தமிழர்கள் என்ற இனமொன்று வாழ்ந்தமைக்கான எந்தவொரு அடையாளங்களும் அற்றுப்போகும் நிலைமையே காணப்படுகின்றது.

அதேபோன்று வடக்கிலும் ஆக்கிரமிப்புக்கான புறச்சூழல்களும், ஏதுநிலைகளும் பெரும்பான்மை தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. படையினரின் அளவுக்கு அதிகமான பிரச்சன்னமும் மத்திய அரசாங்கத்தின் திட்டமிடல்களும் இதற்கான வாய்ப்புகளை அளிப்பதாகவே உள்ளது. இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்து கொண்டு செல்லுமாயின் தமிழர் தாயகத்தில் தமிழினம் தனது அனைத்து அடையாளங்களையும் இழந்து முழுமையாகவே அளிப்புச் செய்யப்பட்டு விடும். எதிர்கால சந்தியினராகிய இளைஞர், யுவதிகள் தமது சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு விடும். ஆகவே இந்த விடயங்களையெல்லாம் கவனத்திற்கொண்டு எழுகதமிழ் எழுச்சிப்பேரணியில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் பங்கேற்று எம்மின இருப்பினை உறுதிசெய்ய உலகறிய கோஷமிடுவோம்.

### பேரணியில் அனைத்து தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும்



**வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேள தலைவர் வே.தவச்செல்வம்**

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெற இருக்கும் எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. ஆகவே தாயகத்தில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் தமது பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்கி அணிதிரள வேண்டும்.

எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணிக்கு 122 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 10 சமாசங்களை உள்ளடக்கிய வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் சார்பில் பூரண ஆதரவினை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம். தமிழர்கள் அரசியல் பலம்பெற்றவர்களாக மாறும்போது தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காணமுடியும். அதனடிப்படையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு எமது ஒத்துழைப்பினை நல்கவுள்ளோம்.

அனைத்து தமிழ் மக்களும் தமது பரிபூரண ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலம் எமது விடயங்களை மீண்டும் ஒருதடவை சர்வதேசம் கவனத்தில் கொள்வதற்கான ஏது நிலைகளை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்த நாமே தலைப்பட்டிருக்கின்றோம். அவர்கள் எமது விடயங்களை கையாள்வதற்குரிய உந்துதல்களையும், அழுத்தங்களையும் நாமே வழங்க வேண்டும்.

இந்த விடயத்தில் நாம் ஒதுங்கி நின்றுவிட முடியாது. ஆகவே எமது உரிமைகளை வென்றெடுக்கும் வரையில் இத்தகைய மக்கள் போராடங்களை தொடர்ந்து முன்னெடுப்பதே எக்கான நியாயமான நிரந்தரமான தீர்வினை பெற்றுத்தரும். இதனை நெஞ்சில் நிறுத்தி ஒவ்வொரு தமிழ் மகனும் தீர்மானம் எடுக்க வேண்டும். எழுக தமிழில் பங்கேற்று உரிமைக்குரல் எழுப்ப வேண்டும்.

### இயக்குநர் வ.கௌதமன் அறிக்கை... தொடர்ச்சி

நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.இன விடுதலைக்காக போராடி தங்களது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவமதிக்கும் விதமாக மாவீரர் துயிலும் இல்லங்களை அடித்து நொறுக்கிவிட்டு அங்கு புத்தர் சிலைகளை நடுகிறார்கள். அந்த வீரத்தின் அடையாள அழிப்பு தடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் மீள் குடியமர்வுக்கான முட்டுக்கட்டைகளை தகர்த்தெறிய வேண்டும்.

அரசியல் கைதிகளாக சிறைக்கொட்டடி—யிலே சித்திரவதைக்கு உட்பட்டு கிடக்கிற தமிழர்கள் உடனே விடுவிக்கப்பட வேண்டும். கிட்டத்தட்ட 25 ஆயிரம் தமிழர்களுக்கு மேல் காணாமல் செய்யப்பட்டோர்கள் பட்டியலில் உள்ளனர். அவர்கள் என்ன ஆனார்கள்? உயிரோடு உள்ளார்களா? இல்லை என்றால் என்ன செய்தார்கள்? என்கிற உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும். இனபிரச்சினைக்கான "தீர்வு" காணாமல் காலம் தாழ்த்துகிற கபடத்தனம் அம்பலப் படுத்தி, உடனடித்தீர்வுக்கு சிங்கள பேரினவாத அரசை காலம் தாழ்த்தாது நிர்பந்திக்க வேண்டும். போர் குற்றங்களுக்கும்,இனப்படுகொலைக்குமான ஒரு அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வேண்டும் . மேற்கண்ட கோரிக்கைகள் மட்டுமல்லாது பன்னாட்டு நீதிமன்றத்தில் நாம் முன் வைக்கும் நிரந்தர தீர்வான,

1. இலங்கைக்கு மீண்டும் கால நீட்டிப்பு வழங்கப்படக் கூடாது.

2. இலங்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு, அல்லது போர்க்குற்றப் புலன் விசாரணைக்கென்று இலங்கைக்காக அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. போரினால் பாதிக்கப்பட்டோரின் துயரம் குறித்தும், ஏனைய சர்வதேச மனிதஉரிமை, மனிதநேயச் சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் இலங்கைக்காக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

4. இன அழிப்புச் சான்றுகளை அழியவிடாமல் காக்க ஒரு நடுநிலை யான பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்!

மேற்கண்ட முதன்மைக் கோரிக்கைகளை எழுக தமிழ் பேரணியில் மட்டுமல்ல, அனைத்து போராட்ட, ஆர்ப்பாட்ட பேரணிகளிலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்!

இலங்கையில் நடைபெற்றது வெறும் போர்குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டு மல்லாது அதுதிட்டமிடப்பட்ட இனப் படுகொலை என்பதை ஐ.நா. பொது சபை அறிவிக்க வேண்டும். சர்வதேச விசாரணையும் பொது வாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரேதீர்வு என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கவேண்டும்!

தமிழீழத்தில் மட்டுமல்லாத உலகெங்கும் தமிழர் எழுச்சிப் பேரணிகள் நடத்தப்பட வேண்டும் என்கிற பெரும் ஆர்வம் தொடர்ந்தும் என் போன்றோருக்கு இருக்கிறது. அந்த வகையில், எழுக தமிழ் பேரணி அதைத் தாண்டிய பெரும் பேரெழுச்சியை கொண்டுவரும் என்பதை மனதில்கொண்டு தமிழ்மக்கள் பேரவை மேற்கொள்வது வரவேற்கத் தக்கதாகும்.

தமது இனவிடுதலை அரசியல் தொடர்பான விழிப்புணர்வும், அது தொடர்பான உரையாடலுமே நம்பிக்கையான மாற்றுத்திட்டங்களை ஏற்படுத்தும். அந்த இடத்தினை நமது புதிய செயற்திட்டங்கள் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைக்கும் போராட்டங்களாக மாற்றம் பெறும். அவ்வாறே இப்பொழுது 'எழுக தமிழ்' கவனம் பெறுகின்றது.

இலங்கை இனவெறி அரசின் இனப் படுகொலையின் மனக் காயம் ஆறாது. தமிழர்கள் நாம் பெரும் எழுச்சிப் போராட்டங்கள் வா—யிலகாவே நமக்கான விடியற்கதவை திறக்க வேண்டியுள்ளது. இது தொடர்ந்து நடந்தேறும். அந்த நம்பிக்கைத் திறவுகோலாய் "எழுக தமிழ்" எழுச்சி அமைய வாழ்த்துகிறேன். பெருந்திராளன எனது மக்கள் இப்பேரணியில் இணையவும், இனஉணர்வாளர்களின் மன எழுச்சியை இவ்வுலகம் கவனம் கொள்ளவும் இப்பேரணி நமக்கு ஓர் வாய்ப்பாகும். தமிழக தமிழர்களின் ஆதரவு எப்போது இதுபோன்ற போராட்டத்தை ஆதரித்தும் ஆர்ப்பரித்தும் எழுச்சிக் கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலாக யார் எப்படி இருந்தாலும் வடக்கு கிழக்கை சேர்ந்த எனது உயிருக்கு நிகரான பள்ளி கல்லூரி தம்பி தங்கைகள் ஒன்றாக நில்லுங்கள். முன்னோடிகள் வழிகாட்ட இளைஞர்கள் வழி நடத்துங்கள். வெல்வோம்.

# எழுக தமிழ் பேரணி வெல்லட்டும்! தமிழர் தம் ஒற்றுமையை உலகறியட்டும்!

**ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின்**

**ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி அறிக்கை**



தமிழ் மக்கள் பேரவையின் முன்னெடுப்பில் எதிர்வரும் செப்டம்பர் 16 என்று நடக்கவிருக்கும் எழுக தமிழ் பேரணி வெல்லட்டும் என ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக வாழ்த்துகிறேன் என்று ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தாவது.... முள்ளி வாய்க்கால் பேரழிவு நிகழ்ந்து ஆண்டுகள் பத்து உருண்டோடிவிட்டன. முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணியவர்கள் ஏமாந்து போயினர். சாட்சிகளற்ற போரை நடத்தி முடித்ததாக இருமாந்து இருந்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் குபுகுபுவென உலகை உலுக்கிய சாட்சிகளால் திக்குமுக்காடிப் போயினர். ஐ.நா.வில் பாராட்டு பத்திரம் வாசிக்கக் கண்டவர்கள் பொறுப்புக்கூறலுக்காகப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆயினும் அரசு என்ற அடிப்படை வலிமையோடு தமது நீண்ட நெடிய இராசதந்திர முதிர்ச்சியோடு உலக மன்றத்தில் நீதியைத் தள்ளிப் போடுவதன் மூலமாகவே நீதியின் மூச்சை நிறுத்திவிடலாம் என்று எண்ணி இருக்கின்றனர். கண் துடைப்புக்காக காணாமற்போனோர் அலுவலகம், பேச்சளவில் அரசியல் தீர்வு வாக்குறுதிகள், நல்லாட்சி, நல்லரசாங்கம், நல்லிணக்கம் என வண்ண வண்ணப் பூச்சுகளெல்லாம் கரைந்தோடக் காண்கிறோம்.

பேரினவாதத்தின் வீரநாயகர்களான ராசபக்சே குடும்பம் பெரும்சக்தியாக எழுந்துவரக் கண்டது உலகம். பிராந்திய வல்லரசும் உலக வல்லரசுகளும் ஏற்படுத்திய ரணில்—சிறிசேனா கூட்டணி பேரினவாதச் சூட்டில் நொறுங்கி போனது. ஆட்சிக் கவழ்ப்பு, பிரதமர் மாற்றம் என அதிரடிகள் அரங்கேறி உலக சட்டங்கள் மட்டுமல்ல உள்ளூர் சட்டங்களையே மதிக்காதவர்கள் என்று தம்மைத் தாம் அம்பலப்படுத்திக் கொண்டது சிங்கள பௌத்த பேரினவாதம். 'ஐ.நா.விடம் பொறுப்புக்கூற வேண்டியதில்லை, எங்கள் வழியில் நாங்கள் செய்துக் கொள்வோம்' என்று வெளிப்படையாக அறிவித்தார் அதிபர் சிறிசேனா. ஐ.நா.வின் கண்களில் மண்ணைத் தூவி தமது படையினரை ஐ.நா. அமைதிக் காப்புப் பணிக்கு அனுப்பி வைத்துப் பாதுகாத்தோமென தமது உத்தியைச் சொல்லி சிங்களர்களிடம் பெருமை அடித்துக் கொண்டார் பிரதமர் ரணில். எல்லாவற்றிற்கும் உச்சமாய் எந்த 58 ஆவது படைப் பிரிவால் யுத்தத்தில் கோரத் தாண்டவம் போல் தமிழர்கள் மீது கொலைப் படலம் நடத்தப்பட்டதோ உறவுகள் ஒப்படைக்கப்பட்டு காணாமலடிக்கப்பட்டனரோ அந்தப் படைப் பிரிவின் தலைவர் சவேந்திர சில்வா இலங்கை அரசப் படைகளின் தலைவராய் மணிமகுடம் சூட்டப்பட்டுள்ளார். தமிழினப் படுகொலைக்கு பரிசு தந்தாற் போல் சிறப்பு செய்யப்பட்டுள்ளார். தமிழ் இனவழிப்பு என்பது பரிசில் பெறத் தக்க, பதவி உயர்வுப் பெறத் தக்க செயல் என சிங்களத் தலைவர்களால் இனப்படுகொலைப் பண்பாடு உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் பிற நாடுகளோடு இணைந்து கொண்டுவந்த தீர்மானங்களைக் காலில் போட்டு மிதிப்பதற்கு ஒப்பான செயல் இது. ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் ஆணையர் மிசேல் பச்செலட்டும் இதன் பொருட்டு கவலை தெரிவித்துள்ளார். இந்நிலையில்தான், யார் பெரிய சிங்கள பௌத்தப் பேரினவாதிகள் என்பதற்கான அதிபர் தேர்தலுக்கு அணியமாகிக் கொண்டிருக்கிறது இலங்கை தீவு.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தாக்குதலில் தமிழர் மீண்டும் இரத்தம் சிந்தினர். தமிழ் முஸ்லிம்கள் மீது பௌத்தப் பேரினவாதம் நிகழ்த்தி வந்த ஒடுக்குமுறைக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்தது போல் பேரினவாதம் பேயாட்டம் போடத் தொடங்கியது. தமிழர் தம் குருதியைக் கொண்டு தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட இனகொலைக் குற்றத்தின் தடயங்களை அழிக்க முற்பட்டு வருகிறது சிங்கள அரசு. 'போர்க்குற்ற விசாரணை என்று கேட்டதுதான் இராணுவத்தின் உளவியலைப் பாதித்துவிட்டது' என ஈஸ்டர் குண்டு வெடிப்பு சத்தத்திற்கு இடையிலும் இனக்கொலைக்கு நீதி கோருவதைக் குற்றமாக்கப் பார்த்தார் அதிபர். ஆயிரமாயிரமாய் போராளிகள் மாண்டனர். ஆயிரமாயிரமாய் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். குழந்தைகள், பெண்கள், முதியர்கள் என ஒருவரும் விட்டுவைக்கப்படவில்லை. ஆயிரமாயிரமாய் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உலக நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். வடக்கும் கிழக்கும் நிலத் தொடர்சி அற்று பிரிக்கப்பட்டுவிட்டது. வடக்கில் ஒரு கிராமத்தில் ஒரு சிங்களவர் இருந்தால் கூட அது தமிழ்—சிங்கள கிராமமென முத்திரை—யிடப்படுகிறது. பௌத்த விகாரைகள் ஊரெங்கும் நிறுவப்படுகின்றன. வளர்த்தித் திட்டமென்ற பெயரால் நிலப்பறிப்பும் சிங்களக் குடியேற்றமும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

பிராந்தியமெங்கும் ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒற்றையாட்சி என ஆளும் வர்க்கத்தாரின் ஓலம் கேட்டுக் கொண்டிருக்கிறது. எழுந்து நின்றால் வாழ்வு, இல்லையேல் இருந்த இடம் தெரியாமல் கரைந்துபோக வேண்டும் என்ற அச்சம் மேலோங்கியிருக்கின்றது. ஆனால், வேலியே பயிரை மேய்ந்தார் போல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாளாவிருக்கின்றனர். வாளாவிருந்தால்கூட பரவாயில்லை, எதிரியின் காலடியில் சரணம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிரிக்கு வால் பிடித்து வாழ்வு தேடிக் கொள்ளப் பார்க்கிறார்கள். பிராந்திய அரசுகளையும் வல்லரசுகளையும் துணைக் கொண்டு இன அழிப்பு வேலைகளை முடுக்கி முன்னேறும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு எதிராய் தமிழர் ஒன்றுபட்டாக வேண்டிய தருணமிது. ஒன்றுபட மறுத்தால் அது இறுதியான பொருளில் எதிரிக்கு சேவை செய்வதென அறிந்தும் அறியாமலும் ஒற்றுமைக்கு உலை வைத்துக் கொண்டும் உள்ளனர் சிலர். இத்தனைக்கும் இடையில்தான் நம்பிக்கையை விதைக்கப் போகும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடக்கவிருக்கின்றது. சீனப் பேரரசுக்கு எதிராய் ஹாங்காங் மக்கள் நடத்திய எழுச்சிப் போராட்டத்தின் வெற்றி — வரலாறு காட்டி நிற்கும் அண்மைய எடுத்துக்காட்டு. அலைகடல் என மக்கள் எழுந்துவிட்டால், பேரரசுகளும்கூட பின் வாங்கியே தீர வேண்டும். அடங்க மறுத்த மக்கள் கூட்டம் நீதிக்காக நிமிர்ந்து விட்டால், சிறுதுளி கடலாவது போல் சிதறிக் கிடக்கும் மக்கள் திரண்டுவிட்டால், ஆழிப் பேரலையாய் எழுந்துவிட்டால் ஆளும் அரசுகளை ஆணி வேரோடு பிடுங்கி எறியலாம். அந்த அரசுகளுக்கு முட்டுக்கொடுக்கும் துரோக சக்திகள் தீயில் விழுந்து தூசியாய் எரிந்து போவார்கள்.

எழுக தமிழ் பேரணியின் மக்கள் திரட்சியும் அது எழுப்பவிருக்கும் முழக்கமும் நடந்து செல்லும்போது கிளம்பும் புழுதியும் இந்தியப் பெருங்கடலை வட்டமிடும் வல்லரசுகளின் அவ்வல்லரசுகளுக்கிடையில் வாழ்வுநடத்தும் சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் தூக்கம் கெடுக்கட்டும் உடனிருந்து கொண்டே ஊறு செய்வோருக்கு மக்களின் வேணவாக்கள் எவையென்று உணர்த்தட்டும். வாழ்வுக்கு சாவுக்குமான இடைவெளியாய், இருப்புக்கும் அழிவுக்குமான இடைவெளியாய் இன மீட்சிக்கும் இன அழிப்புக்குமான இடைவெளியாய் எழுக தமிழ் பேரணி அமையவிருக்கின்றது. வெல்லட்டும் எழுக தமிழ் பேரணி! அது சொல்லட்டும் உலகுக்கு தமிழர் தாகம் தமிழீழமென்று!



# எழுக தமிழ் பேரணி உலகத்தின் கவனத்தை ஈர்த்து வெற்றி பெறும்

## சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் வாழ்த்து அறிக்கை



செப்டம்பர் 16 இல், தமிழ்மக்கள் பேரவை ஒருங்கிணைக்கும் “எழுக தமிழ்” பேரணி அறவழியான அதிர்வலையை உலகெங்கும் வாழும் இனப்பற்றாளர்களுக்கு எடுத்துரைக்கும் போராட்ட வடிவம்! எழுக தமிழ் பேரணி — இது மக்கள் திரளின் பேரணியாகும்.பொங்கு தமிழ் பேரணியை அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வழிகாட்டுதலோடு யாழ் பல்கலைக் கழகம் தலைமையேற்று நடத்தியது. அதில், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி பாடசாலை மட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களின் பங்களிப்பும் முக்கியமானது. பொங்குதமிழ் நிகழ்வுகள் வழி தமிழ் மக்களை உணர்வு ரீதியாக பெரும் எழுச்சியைப் பெற வைத்ததென்பது நினைவில் கொள்ளத்தக்கது. அதே போன்ற வகையில் ஓர் இன எழுச்சியின் அறவழியின் செயற்களமாய் புதிய வடிவம்பெற்று இன்று எழுக தமிழ் பேரணி கடந்த பல ஆண்டுகளாக எழுச்சி கொள்ளவைப்பது பாராட்டுக்குரியது! வரவேற்புக்குரியது.

உலகில் ஒவ்வொரு தேசிய இனமக்களும் தங்களது தாயக விடுதலைக்காக பெருந்திரள் பேரணியை முன்னெடுத்து ஆதிக்க அரசுகளை அதிரவைப்பது தொடர்ந்து நடந்தேறுகிறது. அந்த வகையில் தமிழீழ தாயக மண்ணில் எழுக தமிழ் பேரணி வழியாக மக்களை மீண்டும் தட்டி எழுப்புவது உடனடி தேவையாகும். அதை எழுக தமிழ் பேரணி தொடர்ந்து செய்கிறது. முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடிந்துவிட்டது என சர்வதேச சமூகம் எண்ணிக் கொண்டிருக்கிறது அதே வேளையில் “முள்ளிவாய்க்கால் என்பது முடிவல்ல! தொடக்கம் என்பதை மக்கள் திரள் போராட்ட வடிவங்களே எமக்கு அவ்வபோது நம்பிக்கை ஊட்டுகின்றன.

அதில் எழுக தமிழ்பேரணி வரலாற்று முக்கியதுவம் வாய்ந்ததாகும். பல நாடுகளின் ஒருங்கிணைப்போடு இலங்கை அரசு திட்டமிட்டு நடத்திய இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் போர் குற்ற ஆதாரங்களோடு பல்வேறு கட்டங்களாக நாம் எடுத்துரைத்தும் எமக்கான நீதி மறுக்கப்பட்டே வருகிறது. ஆனால் இடைவிடாது எமது மக்கள் நிரந்த தீர்வுக்கு ஆக்கபூர்வமான நீதிக்கும் போராடிக் கொண்டிருக்கின்றனர். எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை மக்கள் திரள் பேரணிகளும், அறவழிப் போராட்டங்களும், தாயகமண்ணில் மட்டுமல்ல புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்களால் முன்னெடுக்கப்படும். அதன் ஒரு வடிவமாகத்தான் எழுக தமிழ் பேரணி!

இந்த பேரணி பன்னாட்டுச் சமூகத்தை அதிரவைக்கும். மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரளவேண்டும். தமிழீழ தேசத்தில் திட்டமிட்டு நடத்தப் படும் சிங்கள குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படவும், இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழர்களின் நிலங்கள் விடுவிக்கப்படவும், இன விடுதலைக்காக போராடி தங்களது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவமதிக்கும் விதமாக மாவீரர் துயிலும் இல்லங்களை தகர்த்தெறிந்த எதேச்சதிகாரத்தை முறியடிக்கவும், அரசியல் கைதிகளாக சிறைக்கொட்டடியிலே சித்திரவதைக்கு உட்பட்டு கிடக்கிற தமிழர்கள் உடனே விடுவிக்கப்படவும்,. கிட்டத்தட்ட 30 ஆயிரம் தமிழர்களுக்கு மேல் காணாமல் ஆக்கப்பட்டோர்களை கண்டறியவும் இந்த “எழுக தமிழ் அமையும்!

இனபிரச்சினைக்கான ''தீர்வு'' காணாமல் காலம் தாழ்த்துகிற இலங்கை அரசின் கபடத்தனத்தை அம்பலப்படுத்தி, உடனடித்தீர்வுக்கு சிங்கள பேரினவாத அரசை நிர்பந்தித்து, போர் குற்றங்களுக்கும், இனப்படுகொளைக்குமான ஒரு அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து எழுக தமிழ் பேரணி மட்டுமல்ல.. உலகெங்கும் வாழும் இன உணர்வுப்பற்றாளர்களும் முன்வைத்து அறவழிப் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அதுவே இப்போது தேவையான ஒன்றாகும்.

தமிழர்கள் நாம் பெரும் எழுச்சிப் போராட்டங்கள் வாயிலகாவே நமக்கான தீர்வை பெறமுடியும். ”எழுக தமிழ்” எழுச்சிப்பேரணியாக அமைய வாழ்த்துகிறேன், பெருந்திராளன மக்கள் இப்பேரணியில் கலந்துகொள்ளவேண்டும். உலகத்தின் கவனத்தை ஈர்க்க மீண்டும் நமக்கு ஓர் புதிய வாய்ப்பு! பேரணிபெரும் வெற்றிபெற முக்குலத்தோர் புலிப்படையின் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரி—வித்துக் கொள்கிறேன்.

# எழுக தமிழ்ப் பேரணியில் அனைத்து ஈழத் தமிழ் உறவுகளும் பங்கேற்க வேண்டும் - சீமான்



தமிழீழ தாயகத்தை சிதைத்து அழித்த சிங்கள அரசு போரின் பேரழிவுக்கு பிறகு தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. நமது வழிபாட்டுத்தலங்களை இடித்து தகர்த்த சிங்கள அரசு இன்று புத்த விகாரைகளை நமது நிலமெங்கும் நிறுவி வருகிறது.

இராணுவ குடியேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்து வதற்கு வழியற்ற நிலையில் நிர்க்கதியாக நம் தமிழ் மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தட்டிக்கேட்பதற்கு தமிழ்மக்கள் ஒன்றுசேர்கின்ற ஒரு அரிய வாய்ப்பாக எழுக தமிழ் என்ற புரட்சிகர எழுச்சிமிகுந்த பேரணியை நமது தமிழ் சொந்தங்கள் ஈழத்தில் முன்னெடுக்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த எழுக தமிழ் நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு பேரெழுச்சியான நிகழ்வாக நிகழ்த்திக் காட்டவேண்டும். இந்த எழுக தமிழ் பேரெழுச்சியின் மூலம் சர்வதேசமும் இந்திய பெருநாடும் இலங்கை அரசும் நம்மை திரும்பிப் பார்க்க வேண்டும்.

நாம் முன்வைக்கின்ற கோரிக்கைகளை ஏற்று அதை நிறைவேற்றித்தர வேண்டும். எனவே இந்த நிகழ்வு ஒரு வரலாற்றுப் பெருநிகழ்வாக நிகழவேண்டும். அதை நாம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். இதற்கு எழுக தமிழ் பேரெழுச்சியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என சீமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

# எழுக தமிழ் பேரணி வாயிலாக தமிழர்களின் இனமான எழுச்சியை மீண்டும் இவ்வுலகத்திற்கு காட்டுங்கள்

**இயக்குநர் வ.கௌதமன், பொதுச் செயலாளர் தமிழ்ப் பேரரசு கட்சி**



இந்த நூற்றாண்டின் பெரும் மனிதப்பேரவலம் நம் தமிழீழத்தில் நடந்தேறியதை அவ்வளவு எளிதில் உலகம் மறந்திட இயலாது. சிங்களப் பேரின அரக்கர்களால் நடத்தப்பட்ட 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை திட்டமிட்ட இனப்படுகொலை. பத்து ஆண்டுகள் கடந்து காயங்கள் ஆறி—விட்டன. ஆனால் இன்னும் எமக்கு மனக்காயம் ஆறவில்லை. அன்று ஒலித்த உயிரின் அலறல் இன்றுவரை எங்கள் செவிப்பாறை யில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. பாஸ்பரஸ் குண்டுகளால் குதறப்பட்ட குழந்தைகளும், கிபிரால் கிழித்து எறியப்பட்ட இலட்சக்கணக்கான எமது மக்களும், மண்ணுக்காக உயிர் நீத்து மண்ணோடு மண்ணாக கலந்துவிட்டனர்! பல நாடுகள் கைகோத்து அரங்கேற்றிய இனப்படு கொலையில் எமது தேசம் இழந்த உயிர்ச்சேதம் கணக்கற்றவை!

இலங்கை இராணுவ போர்க்குற்றம் மீதான எவ்வளவு ஆதாரங்கள் அடுக்கி அடுக்கி உலக நாடுகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்றாலும், எமக்கான நீதியை தள்ளி வைத்துக் கொண்டே போகிறது பன்னாட்டு நீதி மையங்கள். ஆனாலும், தமிழீழத்தில் வாழும் சொந்தங்களும், புலம்பெயர்ந்து வாழும் தமிழீழத் தமிழர்களும் தொடர்ந்து வீதிகளில் எமது நீதிக்கான கோரிக்கையை முன்னிறுத்தி அறவழியில் ஆர்ப்பரிக்கின்றனர். இந்த அறவழிபோர் பன்னாட்டுச் சமூகத்தை அசைக்காமல் ஓயாது என்பது மட்டும் என் போன்ற இன உணர்வாளர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையின் உறுதிக்கு எனது குரல் மட்டுமல்ல காயங்களோடும் அறம் மிகுந்த கோபங்களோடும் போராட்டக் கலங்களில் நின்று அதி லிருந்து அரசியல் களத்திற்கு வந்து உறுதியோடு உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பேரரசு கட்சியின் இளைய தலைமுறையும் எப்போதும் வலு சேர்க்கும்.

செப்டம்பர் — 16 அன்று எழுக தமிழ் பேரணி நடக்கவிருக்கிறது. அது எழுக தமிழ் பேரணி மட்டுமல்ல! வீழ்ந்த இனத்தை எழுப்பும் சனநாயக போரணி! தமிழ்மக்கள் பேரவையின் ஒருங்கிணைக்கிற இந்த மாபெரும் பேரணி உலகத்தின் பார்வையை திசை திருப்பும் என்பதில் ஐயமில்லை.இதற்கு முன் ஒவ்வொரு ஆண்டும் பல கோரிக்கைகளோடு நடந்தேறியிருக்கிறது. இம்முறையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரளாக நடந்தேறுகிறது. தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பில் எனது மனப்பூர்வமான வாழ்த்து களை தெரிவித்துக் கொள்கிறேன்.எழுக தமிழ் பேரணி உலகெங்கு வாழும் தமிழின உணர்வாளர்களை மீண்டும் தட்டியெழுப்பும் என்ற நம்பிக்கையை இந்த பேரணி வாயிலக உருவாகும் வாய்ப்பு ஏற்படும் என உறுதியாக நம்புகிறேன்!

தமிழீழ தேசத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் சிங்கள குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழர்களின்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# எழுக தமிழ் ஏன்?

தமிழ் மக்கள் மற்றொரு எழுக தமிழுக்கு தயாராகி வருகிறார்கள். தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் எழுச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறியமுடிகிறது. தாயகத்தில் நடக்கும் எழுக தமிழுக்கு பலம் சேர்க்கும் விதத்தில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் இதில் இணையவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஒரு நல்ல விடயம் தமிழ் மக்கள் எந்த அளவுக்குப் பெருந்திரள் ஆகிறார்களோ அந்தளவுக்கு அழுத்தத்தை கொடுக்கலாம்.

தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைக் கூர்மையாகவும் கூட்டாகத் திரண்டும் காட்ட வேண்டிய ஒரு கால சந்தியில் தமிழ் அரசியல் வந்து நிற்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக யுத்தம் வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 2009க்கு முன் அது மிகவும் வெளிப்படையாக இருந்தது. ஆனால் இப்பொழுது அது மிகவும் கள்ளத்தனமான ஒரு மாய யுத்தமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஆயுதப்போராட்டம் எனப்படுவது ஒரு விளைவு. காரணம் அல்ல. காரணம் எதுவென்றால் இன ஒடுக்குமுறைதான். எனவே 2009 மே மாதம் நசுக்கப்பட்டது ஒரு விளைவுதான். காரணமே அந்த விளைவை நசுக்கியது. அதற்கு அனைத்துலக சமூகம் ஒத்துழைப்பை வழங்கியது.

எனவே 2009இல் அரங்கிலிருந்து அகற்றப்பட்டது விளைவுதான். காரணம் அப்படியே இருக்கிறது. அதன்படி 2009 வரையிலும் யுத்தமானது ஆயுதப் பரிமாணம் கொண்டதாக இருந்தது. ஆனால் 2009 க்குப்பின் அது ஆயுதமற்ற வழிகளில் முன்னெடுக்கப்படுகிறது. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசுக் கட்டமைப்பின் உபகரணங்களான திணைக்களங்களும் நிறுவனங்களும் போரை வேறு வழிகளில் தொடர்கின்றன.

எனவே ஒடுக்குமுறை தொடர்ந்தும் இருக்கிறது. இந்த ஒடுக்கு முறையானதுஆயுதப் போராட்டத்தை நசுக்கிய போது உலக சமூகம் அதற்கு ஒத்துழைப்பை வழங்கியது. ஆயுதப் போராட்டம்தான் பிரச்சினை அதை நக்கினால் ஒரு தீர்வை முன் வைப்போம் எனவே ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு உதவுங்கள் என்று இலங்கை அரசாங்கம் உலக சமூகத்திடம் கேட்டது. அந்த அடிப்படையிலேயே உலக சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு உதவியது என்று அண்மைக்காலமாக சம்பந்தர் கூறிவருகிறார். இவ்வாறு ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு உதவி வழங்கிய உலக சமூகம் இப்பொழுது ஓர் அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று சம்பந்தர் கேட்கிறார்.

ஆயுதப்போராட்டம் ஒரு விளைவு தான் அது ஒரு காரணம் அல்ல. ஒடுக்குமுறையே மூலக் காரணம். அது 2009க்கு பின்னரும் அப்படியே இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளாக அது எதிர்ப்பு எதுவுமின்றி யுத்தத்தை வேறு வழிகளில் முன்னெடுத்து வருகிறது. அதை எதிர்த்து கூட்டமைப்பு போராடவில்லை. ஏனைய கட்சிகளும் போதிய அளவு போராடவில்லை.

**நிலாந்தன்**

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லா கட்சிகளும் தேர்தல் மையக்கட்சிகள்தான். அவர்களிடம் ஒரு வெகுசன எழுச்சிக்கான வேலை திட்டம் எதுவும் கிடையாது. மக்கள் அரசியலை முன்னெடுப்பதற்குத் தேவையான அரசியல் தரிசனமோ திட சித்தமோ வழிவரை படமோ நிறுவனக் கட்டமைப்போ அவர்களிடம் இல்லை. வேண்டுமானால் ஒருநாள் கர்த்தால் ஒருநாள் எழுச்சி ஒருநாள் கவனயீர்ப்பு போன்ற ஒருநாள் போராட்டங்களைத் தான் அவர்களால் நடத்த முடியும். அவற்றிலும் பல சிறுதிரள் போராட்டங்களே பெருந்திரள் போராட்டங்கள் அல்ல.

எழுகதமிழ் ஒரு பெருந்திரள் போராட்டம். ஆனாலும் அண்மை மாதங்களாக ஹொங்கொங்கில் நடந்து வரும் பெருந்திரள் மக்கள் எழுச்சியோடு எழுக தமிழை ஒப்பிட முடியாது.கடந்த யூன் 16ஆம் திகதி மட்டும் ஹொங்கொங்கில் சுமார் இருப்பது லட்சம் மக்கள் தெருக்களில் இறங்கினார்கள். கடந்த புதன் கிழமை அப்போராட்டம் அதன் முதற்கட்ட வெற்றியைப் பெற்றது. சர்ச்சைக்குரிய சட்ட மூலத்தைப் பின் வாங்க ஹொங்கொங் நிர்வாகம் ஒத்துக் கொண்டது.எனினும் புதிய கோரிக்கைளை முன்வைத்துப் போராட்டம் தொடர்கிறது.



அதன் பருமன் தொடர்ச்சி வீச்சு என்பவற்றைக் கருதிக் கூறின் எழுக தமிழானது ஹொங்கொங் மக்கள் எழுச்சிக்குக் கிட்ட வராது. அதுமட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியில் இதுவரை நடந்த எந்த ஒரு மக்கள் எழுச்சியையும் ஹொங்கொங் மக்கள் எழுச்சியோடு ஒப்பிட முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கட்சிகள் யாவும் ஒருநாள் எழுச்சிகளையும் ஒருநாள் கடை அடைப்பையும், சிறு திரள் போராட்டங்களையும், சிறிய கவன ஈர்ப்புப் போராட்டங்களையும் ஒழுங்கு செய்யத்தக்க வரையறுக்கப்பட்ட பலத்தைக் கொண்டவைதான்.காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் தொடர்ச்சியானது ஆனால் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் இப்பொழுது 900 நாட்களை கடந்து விட்டது. தமது காணிகளை கேட்டு கேப்பாபுலவில் மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். அப்போராட்டம் ஏறக்குறைய சோர்ந்து விட்டது. பல மாதங்களுக்கு முன்பு மன்னாரில் முள்ளிக்குளத்தில் தமது காணிகளையும் வீடுகளையும் கேட்டு மக்கள் போராடினார்கள். ஆனால் அவர்களுடைய சில காணிகளும் சில வீடுகளுமே விடுவிக்கப்பட்டன. ஏனையவை விடுவிக்கப்படவில்லை. அந்த மக்களின் போராட்டத்தைப்பற்றி இப்பொழுது யாரும் கதைப்பதில்லை.

அரசியல் கைதிகளின் விடயத்திலும் அப்படித்தான். கைதிகள் தங்கள் பாட்டில் உண்ணா விரதம் இருக்க தொடங்குவார்கள். கைதிகளுக்காக வழமையாக போராடிவரும்ஓர் அங்கிலிக்கன் மதகுரு அரங்கில் இறங்குவார் அவர் வடக்கு—கிழக்குக்கு வந்து இங்கு உள்ள மக்கள் அமைப்புகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக போராட்டங்களை ஒருங்கிணைப்பார். ஒரு கட்டத்தில் இதில் பல்கலைக்கழகமும் இணையும். போராட்டம் எழுச்சியுறும். ஆனால் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி போராட்டம் முடித்து வைக்கப்படும். எந்த ஒரு கைதியும் விடுவிக்கப் படுவதில்லை. இப்படித்தான் கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

அண்மையில் கூட ஒரு கைதி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். அமைச்சர் மனோகனேசன் அதில் தலையிட்டார். அரசியல் கைதிகள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாக கூறினார். ஆனால் இன்று வரையிலும் அப்படி எதுவும் நடக்கவில்லை. இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினருக்கு சொந்தமான தமிழ் மிரர் பத்திரிகை அதன் ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந்தது.

மனோ கணேசன் வாக்குறுதி அளித்த அமைச்சரவை பத்திரம் என்னவா—யிற்று என்று ஆசிரியர் தலையங்கம் கேள்வி எழுப்பி இருந்தது. அதற்கு மனோ கணேசன் முகநூலில் பதில் கூறினார். இதுபோன்ற விடயங்களில் அமைச்சரவை பத்திரத்தை நகர்த்துவதில் உள்ள இடர்களை அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். எடுத்த எடுப்பில் அப்படி ஓர் அமைச்சரவை பத்திரத்திற்கு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை சம்மதிக்கச் செய்ய முடியாது என்று தொனிப்பட அவருடைய பதில் அமைந்திருந்தது. எனினும் இன்று வரையிலும் கைதிகளுக்கு தீர்வில்லை.

இதுதான் நிலைமை. கடந்த பத்தாண்டுகளாக தமிழ்மக்களின் எந்த ஒரு போராட்டத்துக்கும் முழுமையான தீர்வு கிடைக்கவில்லை. இப்போராட்டங்களில் அதிகம் அக்கறை கொள்ளாத அல்லது இப்போராட்டக் களங்களில்அதிகம் காணப்படாத கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்கள் இப்போராட்டங்கள் எல்லாவற்றையும்விட ஓர் அரசியல் தீர்வு

தொடர்ச்சி 9ம் பக்கம்

# சனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் பின்வாங்கமாட்டேன் சஜித் சூளுரை - ரணில் அதிர்ச்சி

தன்னை வேட்பாளராக அறிவிக்க கோரி முன்னெடுக்கும் போராட்டத்திலிருந்து ஒரு அடி கூட பின்வாங்க போவதில்லை என அமைச்சர் சஜித் பிரேமதாச, தெரிவித்தார். ஐக்கியத் தேசியக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். தன்னை வேட்பாளராக அறிவிக்க கோரி முன்னெடுக்கும் போராட்டத்திலிருந்து ஒரு அடி கூட பின்வாங்க போவதில்லை என அமைச்சர் சஜித் பிரேமதாச, தெரிவித்தார். ஐக்கியத் தேசியக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அதனால் பிரதமர், சபாநாயகர் கரு ஜயசூரியவின் ஆசிர்வாதத்துடனேயே தான் தேர்தலில் களமிறங்க முன்வருவேன் எனவும் தெரிவித்தார். நாட்டை முன்னேற்றும் செயற்திறன் மிக்க வேலைத்திட்டம் ஒன்று தன்னிடத்தில் உள்ளதெனவும், பொதுமக்கள் வயிற்றுப்பசி இல்லாமல் வாழ்க்கைச் சூழல் ஒன்றை உருவாக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல், நாட்டின் வருமானம் ஒரு குடும்பத்துக்கு மாத்திரம் பயனளிப்பதாக இருக்க கூடாதெனவும், சாதாரண மக்கள் கைகளில் நாட்டின் வருமானம் சென்றடைய வேண்டுமெனவும் தெரிவித்தார். தன்னை பற்றி சிலர் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதாக தெரிவித்த அவர், ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னர் 10 முறை தன்னை பிரதமராக பதவியேற்றுக் கொள்ளுமாறு கூறிய போதும், 52 நாள் அரசாங்கத்தில் 60 முறை அழைப்பு விடுக்கப்பட்ட போதும் தான் ஏற்கவில்லை எனவும், பின்கதவால் பதவியேற்கத் தான் ஒருபோதும் தயாரில்லை எனவும் தெரிவித்தார். அதனால், மக்கள் தோல்களின் மீது ஏறிதான் இலக்கை நோக்கி பயணிப்பேன் என்றும், கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்க வேண்டுமெனவே சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியதாகவும் குறிப்பிட்டிருந்தார். அதனால் சூழ்ச்சிகளால் அரசியல் செய்யப்போவதில்லை எனவும், சிலரால் தனது நேர்மையை பொறுத்துகொள்ள முடியாத நிலைமை காணப்படுவாதாகவும், தான் பிறந்த நாள் முதல் தந்தையின் பழக்கம் தனக்கு தொற்றிக் கொண்டதெனவும் தெரிவித்தார். அதனால் செல்வந்தர்கள் தன்னை எதிர்த்தாலும் சாதாரண மக்கள் தன்னை ஏற்றுகொள்வர் எனத் தெரிவித்த அவர், பின்கதவால் பதவி வகிக்க விரும்பாத தான் வெற்றிபெற்ற பின்பும் அரச மாளிகைகளில்





குடியிருக்க போவதில்லை எனவும், பொது மக்களுடன் வீதியிலேயே இருப்பேன் எனவும் தெரிவித்தார். அதேபோல் எந்த மோசடியும் இல்லாத தன்னை வேட்பாளராக களமிறக்க தயங்குவதன் நோக்கம் தனக்கு புரியவில்லை எனவும், 71 முறை தனது தலைவரை காப்பாற்றிய தனக்கு கட்சி மீது அந்த பற்று உள்ளதெனவும் தெரிவித்தார். அவ்வாறிருக்க தன்னை வேட்பாளராக அறிவிக்க எவ்வளவு தயங்கினாலும் ஒரு அடியேனும் பின்வாங்கபோவதில்லை எனவும் தெரிவித்தார்.

---

9ம் பக்கத் தொடர்ச்சி

பிரதானமானது என்பது போல நடந்து கொண்டார்கள். தீர்வை நோக்கி அவர்களுடைய கவனம் முழுவதும் குவிக்கப்பட்டிருந்தது போல காட்டிக் கொண்டார்கள். தீர்வுக்காக அவர்கள் தமது சொந்த வாக்காளர்களுக்கு புரட்டிப் புரட்டி கதைத்தார்கள். ஒவ்வொரு பண்டிகை நாளின் போதும் அடுத்த பண்டிகைக்கு தீர்வு கிடைக்கும் என்று ஓர் ஆவிக்குரிய சபையின் போதகரை போல சம்பந்தர் வாக்குறுதி வழங்கினார். ஆனால் தீர்வு திட்டம் கடந்த ஒக்டோபர் மாதம் நிகழ்ந்த ஆட்சி குழப்பத்தோடு இறுகி நின்றுவிட்டது.

இப்படிப்பட்ட பரிதாபகரமான அரசியல் சூழலில் தமிழ் மக்கள் நமது தேசிய இருப்பை பாதுகாப்பதற்காகவும் ஆயுதப் போரின் விளைவாக வந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காகவும் அதேசமயம் இனப்பிரச்சினைக்கான பொருத்தமான ஒரு தீர்வை பெற்றுக் கொள்வதற்காகவும் கேந்திர முக்கியத்துவம் மிக்க தமது வாக்குகளை பொருத்தமான விதத்தில் பிரயோகிப்பதற்காகவும்ஒன்று திரள வேண்டியிருக்கிறது, போராட வேண்டியிருக்கிறது. அவர்கள் யாருக்கு வாக்களித்தார்களோ அவர்கள் போராட மாட்டார்கள். கூட்டமைப்பு பிழை விடுகிறது என்று கூறுபவர்களும் தேர்தல் மைய அரசியல்வாதிகள்தான். அவர்களிடமும் ஒரு பெருந்திரள் வெகுசன எழுச்சிக்குரிய வேலைத் திட்டங்கள் எதுவும் கிடையாது.

இப்படியொரு வெற்றிடத்தில்தான் தமிழ் மக்கள் பேரவையின் மீதான எதிர்பார்ப்பு அதிகரிக்கிறது. ஆனால் பேரவை கட்சிகள் மீதும் சனங்கள் மீதும் செல்வாக்குச் செலுத்தும் ஓரமைப்பாகத் தொடர்ந்துமுள்ளதா என்ற சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன. அதற்குள் காணப்பட்ட கட்சிகள் பல திசைகளிலும் சிதறி போய்விட்டன. இனிமேலாவது அதை அதன் மெய்யான பொருளில் ஒரு மக்கள் இயக்கமாக கட்டியெழுப்ப வேண்டும் என்று ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

ஆனால் பேரவையை விக்னேஸ்வரன் மைய அமைப்பாகத் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பும் தரப்பினர் பேரவைக்குள் புதிய மாற்றங்களைச் செய்வதற்கு தடையாக காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட குழப்பங்களின் மத்தியில்தான் எழுக தமிழுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. பேரவை ஒப்பீட்டளவில் பலவீனமாக காணப்படும் ஒரு காலகட்டத்தில் இந்த அழைப்பு வந்திருக்கிறது.

அதேசமயம் இப்படி ஒரு மக்கள் எழுச்சியை குறைந்தது ஒரு நாள் மக்கள் எழுச்சியையாவது நிகழ்த்திக் காட்ட வேண்டிய ஒரு கட்டாயம் தமிழ் மக்களுக்கு உண்டு. கடந்த பத்தாண்டுகளாக போரை வேறு வழிகளில் தொடரும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்தவும் எதிர்க்கவும் இது அவசியம் ஆகும்.

ஆயுதப்போராட்டத்தை ஒரு தடையாக பார்த்த உலக சமூகத்துக்கு ஒடுக்குமுறைதான் தடை என்ற ஒரு செய்தியை கொடுக்க வேண்டும். யுத்தம் வேறு வழிகளில் எதிர்பேதுமின்றி ஒருதலைப் பட்சமாக முன்னெடுக்கப்பட்டுவருவதை எடுத்துக் காட்ட வேண்டும். நிலைமாறுகால நீதியை ஒரு தீர்வாக முன்மொழிந்த ஐ.நா.வுக்கும் அதை இப்பொழுதும் ஆதரிக்கும் நாடுகளுக்கும் தமது ஏமாற்றத்தையும் விரக்தியையும் வெறுப்பையும் தமிழ்மக்கள் கூர்மையாக வெளிக்காட்ட வேண்டும்.




இந்த ஆண்டின் இறுதியில் ஒரு சனாதிபதி தேர்தல் வரவிருக்கிறது. தமிழ் மக்கள்கேந்திர முக்கியத்துவம் மிக்க வாக்குகளை பெற்றவர்கள். அந்த வாக்குகளை எப்படித் தீர்க்க தரிசனமாக பாவிப்பது என்பதைக் குறித்து மூலோபாய ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும் தமிழ் மக்கள் முடிவு எடுக்க வேண்டும். அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பொருத்தமான கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கருத்துருவாக்கிகளும் புத்திஜீவிகளும் இது விடயத்தில் ஆர்வமுடைய அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

இவர்களை எல்லாம் ஒன்று திரட்டும் ஓர் இடை ஊடாட்டத் தளமாக தமிழ் மக்கள் பேரவை செயற்படவேண்டும். எல்லாத் தமிழ் மாவட்டங்களையும், எல்லாத் தமிழச் சிவில் அமைப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்டமைப்பு மாற்றத்துக்குப் பேரவை உள்ளாக வேண்டும். அதற்கொரு யாப்பு வேண்டும். புதிய நிலைமைகளுக்கு ஏற்ப புதிய போராட்ட வடிவங்களை கண்டுபிடிப்பதற்கான உரையாடல்களைப் பேரவை தொடங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் அடுத்த கட்டம் எதுவென்று தெரியாமல் தேங்கி நிற்பதற்கு ஒரு மக்கள் இயக்கமாகப் பேரவையும் பொறுப்புத்தான். ஏற்கனவே தேங்கிப் போயிருக்கும் போராட்டங்களை எப்படி அடுத்த கட்டத்துக்கு நகர்த்தலாம் என்பதைக் குறித்து பேரவையும் ஏனைய கட்சிகளும் அமைப்புகளும் சிந்திக்க வேண்டும். இப்போதிருக்கும் பேரவை மேற்கண்ட உரையாடல்களுக்கு பொருத்தமானதாக இல்லை என்றால் அது தன்னை அடுத்த கட்டக் கூர்ப்பிற்குத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு யாப்பு முன்மொழிவைத் தயாரிப்பதை விடவும் கடினமான பணி இது. இப்போதுள்ள அரசியல் சூழலில் தமிழ் மக்களுக்கு எழுக தமிழ் வேண்டும். ஒரு எழுக தமிழ் மட்டும் போதாது. பல எழுக தமிழ்கள் வேண்டும். அதுவும் தொடர்ச்சியாக வேண்டும். ஹொங்கொங்கில் நடப்பதைப் போல அது ஒரு தொடர் மக்கள் எழுச்சியாக அமைய வேண்டும்.தமிழ் மக்கள் பேரவையும் வேண்டும். அது தமிழ்க் கட்சிகளின் மீதும் தமிழ் மக்கள் மீதும் தார்மீகத் தலையீட்டைச் செய்யக் கூடிய ஒரு வளர்ச்சியைப் பெற வேண்டும். ஏனெனில் இனிவரப்போவது தேர்தல்களின் காலம்.

"சஜித் வருகின்றார்..." என்ற தலைப்பில், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக மூன்றாவது பேரணி குருநாகலில் நடைபெற்றிருக்கும் நிலையில், கட்சியின் முக்கியஸ்த்தர்களை வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்த ரணில், "நானே வேட்பாளர்" என உறுதியாகக் கூறியிருக்கின்றார். சஜித் தரப்பினரின் சீற்றத்தை இது மேலும் அதிகப்படுத்தியிருக்கின்றது. இதற்குப் பதிலடியாக நேற்று சனிக்கிழமை ஐ.தே.க.வின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில், சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இவை அனைத்தும் மோதல் உச்ச கட்டத்துக்கு வந்திருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

விடயத்தை அவருக்குக் கூறவுள்ளார் என்றும் குறிப்பிட்டார். ரணிலின் இந்த முடிவு குறித்து அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரமவும், கபிர் காசிமும் அதிருப்தி தெரிவித்தனர். சஜித்துக்கு மக்கள் செல்வாக்கு அதிகம் இருப்பதாகவும், அவரது கூட்டத்துக்கு மக்கள் திரளுகின்றனர் என்றும் கபீர் காசிம் குறிப்பிட்டார். அதை மறுத்துரைத்த ரணில், "அது ஐ.தே.கட்சிக்குத் திரளும் கூட்டம், அடுத்த வாரத்தில் இருந்து நானும் கூட்டம் வைப்பேன், அதற்கும் மக்கள் திரளுவார்கள்" என்றார்.

"நினைத்தபடி பொதுக் கூட்டத்தை நடத்தி, அதைக் காட்டி, கட்சியை உடைக்க அனுமதிக்க முடியாது" என்றும் ரணில் கடுமையாகக் கூறினார்.

நடைபெற்ற பேரணிகளுடன் ஒப்பிடும் போது குருநாகலில் அதிகளவான ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருப்பது சஜித் தரப்புக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்திருக்கின்றது.

முறுகல்நிலை முற்றியிருக்கும் நிலையிலேயே கட்சியின் விரேஷ்ட் தலைவர்களை அழைத்து அலரி மாளிகையில் வெள்ளிக்கிழமை இந்த சந்திப்பை ரணில் ஏற்பாடு செய்திருந்தார். ரவி கருணாநாயக்கா, ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்ரம பெரேரா, அகிலவிராஜ் காரியவசம், சரத் பொன்சேகா, தயா கமகே போன்றோரும் கலந்து கொண்டனர். அவர்கள் ரணிலின் நிலைப்பாட்டை அங்கீகரிக்கும் வகையில் செயற்பட்டார்கள். கட்சிக்குள் இவ்வாறு

# தனி வழியில் செல்வாரா சஜித்?

**பூமிகன்**

இந்த நிலையில், நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சில சூத்திரங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தப் பிரச்சினை தொடர்பில் ரணிலும் சஜித்தும் சந்தித்துப் பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனை ரணில்தான் கூறியிருக்கின்றார். ஆனால், சஜித் இவ்வாறான சந்திப்பை உறுதிப்படுத்தவில்லை.

ரணிலின் முக்கிய ஆதரவாக இருப்பவர் ரவி கருணாநாயக்க. ரவியை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்த பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர், "இந்த நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர உங்களிடமுள்ள சூத்திரம் என்ன?" எனக் கேட்டிருக்கின்றார். இதற்குப் பதிலளித்த ரவி, "ஜனாதிபதி வேட்பாளர் ரணில், பிரதமர் வேட்பாளர் கரு" என்றவகையில் பதிலளித்திருக்கின்றார். "அப்படியானால் சஜித்?" எனக் கேட்டபோது ரவி கொடுத்த பதில் ஆச்சரியமாக இருந்தது. "சஜித் ஒரு சிரேஷ்ட அமைச்சர். நானும் சஜித்தும் சிரேஷ்ட அமைச்சர்கள்" எனக் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, சஜித்தை ஏற்றுக்கொள்ள ரவி தயாராகவில்லை. ரணில் உறுதியாக நிற்பதற்கு ரவி போன்றவர்களின் அழுத்தங்களும் காரணம் என பங்காளிக் கட்சியின் குறிப்பிட்ட தலைவர் தெரிவித்தார்.

கட்சியின் முக்கிய தலைவர்களை வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் ரணில் சந்தித்துப்பேசிய போதும் ரணிலிடம் இந்த உறுதியைக் காணமுடிந்தது. இரு முகாம்களில் உள்ளவர்களும் பங்குகொண்ட இந்தக் கூட்டத்தில் சுமூக நிலை ஏற்படுவதற்குப் பதிலாக முரண்பாடுகள் மேலோங்குவதைத்தான் காணக்கூடியதாக இருந்தது. சஜித் இதில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொண்டார். மங்களவும் யாழ்ப்பாணம் புறப்பட்டதால் இதில் பங்கேற்கவில்லை. பதிலாக அவரது ஆதரவாளர்கள் பலரும் பங்குகொண்டிருந்தார்கள். மறுதரப்புக்கு இடமளிக்காமல், தேர்தலில் போட்டியிடப்போவதான தன்னுடைய முடிவை அறிவித்து அது குறித்து கருத்தை அறிவதிலேயே ரணில் அக்கறை காட்டினார். அத்துடன், சஜித் மீதான தாக்குதலை அவர் முதல் முறையாகத் தொடுத்தார்.

"விரும்பியவர்கள் எல்லாம் தம்பாட்டில் வேட்பாளர் என்று அறிவித்து, கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் குலைக்க இடமளிக்க முடியாது" என்று தெரி— வித்த ரணில், இவ்விடயம் குறித்து ஞா— யிற்றுக்கிழமை தாம் அலரி மாளிகையில் கட்சியின் சஜித் பிரேமதாஸாவைச் சந்தித்து



இக் கூட்டத்தில் கட்சியின் மற்றொரு மூத்த தலைவரான லக்ஷ்மன் கிரியயல்ல கடுமையாகக் கபீர் காசிமுடன் தர்க்கப்பட்டார். கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை முறியடித்து நடக்க வேண்டாம் என அவர் கண்டிப்புடன் கூறினார். ஒரு கட்டத்தில் கபீர் காசிம் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி சஜித் நடந்துகொள்வதை இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவரது ஆதரவாளராக ரஞ்சித் மத்தும பண்டார ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகவில் தன்னுடைய மூன்றாவது கூட்டத்தை சஜித் நடத்திமுடித்திருக்கும் நிலையில், ரணில் தரப்பினர் கடுமையான சீற்றத்தில் இருப்பதை இதன் போது அவதானிக்க முடிந்தது. ரணிலின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவரான அகில விராஜின் சொந்தத் தொகுதியே குருநாகல் என்பது குறிப்பிடத்தக்கது. ரணிலுக்கு ஆதரவானவர்களின் கோட்டைக்குள்ளேயே தனக்குள்ள ஆதரவைக் காட்டுவதற்காகத்தான் குருநாகலில் தன்னுடைய மூன்றாவது பேரணியை சஜித் நடத்திக் காட்டியிருப்பதாகச் சொல்லப் படுகின்றது. பதுளையிலும், மாத்தறையிலும்

ஒரு சிலர்தான் ரணிலின் ஆதரவாளர்களாக இருக்கின்றார்கள். வேட்பாளராக சஜித் களமிறங்கினால், அதன் அடுத்த கட்டமாக கட்சித் தலைமையையும் அவர் கைப்பற்றுவார். அதன்மூலம் தமது அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்ற அச்சத்தில் ரணிலுக்கு உற்சாகம் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள் இவர்கள்தான்.

ரணில் ஜனாதிபதி வேட்பாளர், சஜித் பிரதமர் வேட்பாளர் என்பதை ஏற்றுக்கொள்ள இவர்களில் சிலர் தயாராக இருப்பதாகவும் தெரிகின்றது. ஆனால், சஜித் தரப்பைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலையிலிருந்து இறங்குவதற்கு அவர்கள் தயாராகவில்லை. ரணிலும் களத்தில் இறங்குவாராயின், கட்சியின் செயற்குழு, பாராளுமன்றக் குழு இரண்டையும் ஒன்றாகக் கூட்டி — அதில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது சஜித் தரப்பினரது கோரிக்கை. இரகசிய வாக்கெடுப்பு என்ற கோரிக்கையை ரணில் ஏற்பாரா என்பது தெரியவில்லை.

ரணில் — சஜித் முரண்பாடுகளால் அதிகளவுக்கு விரக்தியடைந்திருப்பவர்கள் பங்காளிக் கட்சிகள்தான். மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி, சம்பிக்க ரணவக்கவின் ஹெல உருமய என்பன சஜித்தை தீவிரமாக ஆதரிக்கின்றன. சஜித்தின் கொள்கைகளுக்காக அல்ல. கோட்டாவை எதிர்கொள்ள சஜித்தினால் மட்டும்தான் முடியும் என அவர்கள் நம்புகின்றார்கள். நேற்றிரவு ரணிலை அவர்கள் சந்திக்கவிருந்தார்கள். "சஜித் போட்டியிடுவதை ரணில் ஏற்கவில்லையென்றால், சஜீத் தனியாகக் களமிறங்குவார். அவரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை நாமும் எடுப்போம். நாமும் சஜித்துடன் செல்வோம்" என பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர் சொன்னார்.

சஜித்துக்கு விட்டுக்கொடுக்க ரணில் தயாராகவில்லை. சஜித் தலைமைக்கு வந்தால் தன்னையும் தனது ஆதரவாளர்களையும் அரசியல் அநாதைகளாக்கிவிடுவார்கள் என்பது ரணிலுக்குத் தெரியும். பிரேமதாச ஜனாதிபதியாகிய போது ஜெயவர்த்தனவுக்கும், அவரது ஆதரவாளர்களாக லலித், காமினி ஆகியோருக்கும் நடந்தது ரணிலுக்கு ஒரு பாடம். மகிந்தவும் ஜனாதிபதியாகியவுடன் பண்டாரநாயக்க குடும்பத்தையே அரசியல் அனாதைகளாக்கினார். சஜித் ஜனாதிபதியானால், அதுதான் நடக்கும் என்பதால் இறுதிவரை போராடுவது ரணிலின் தெரிவாக இருக்கலாம். இணக்கம் ஏற்படவில்லை என்றால், இரகசிய வாக்கெடுப்புக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடலாம்!

# அகதியாய் அலைவுறும் ஈழத் தமிழினம்



## தீபச்செல்வன்

ஈழத்தில் போர் நடந்து முப்பது வருடங்கள் என்றால், ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து அலைவுறத் தொடங்கியும் முப்பது வருடங்கள் கடந்தும் அலைகின்றனர் என்றே அர்த்தமாகும். உலகில் எந்தவொரு இனக் குழுவும் தமது சொந்த மண்ணைவிட்டு, மிகவிருப்பத்துடன் புலம்பெயர்வதில்லை. அதுவொரு மரண வலி. கடலில் இருந்து மீனை தூக்கி தரையில் வீசுவதைப் போன்றது. ஒரு மண்ணில் நன்கு வேரோடிய செடியை பிடுங்கி, முற்றிலும் தொடர்பற்ற இன்னொரு மண்ணில் நடுவதற்கு ஒப்பானது.

கடல் மீன் தரையில் வாழாது. அதைப்போலவே வேரும் இலைகளும் பச்சையங்களும் வாடிப் போனதொரு, உக்கிப் போனதொரு செடியாகவே ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து உலகம் எங்கும் அலைந்து உழல்கின்றனர். சொந்த மண்ணில் வாழ முடியாத நெருக்கடிகளால், ஒளிந்து வாழும் வாழ்வை தாங்க முடியாது. மிகவும் அபாயமான வழிகளில் தாய் நிலத்தைவிட்டு எமது மக்கள் பெயர்கின்றனர். இன்றைக்கு உலக நாடுகள் பலவற்றிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர். ஈழ மண்ணிலிருந்து சிதறிப்போன நிலையில் உலகப் பந்து முழுவதும் வாழ்கின்றனர்.

தாய் மண்ணில் உரிமைக்கும் விடுதலைக்கும் உக்கிரமானதொரு போராட்டம் நடந்தது. இப்போதும் நடந்து கொண்டே இருக்கின்றது. தாயகத்தின் இறுதி யுத்த களத்தில் நின்ற புகைப்படக்கலைஞர் அமரதாஸ், ஒரு முன்னாள் போராளியும் கூட. 2009 இறுதிப்போர் நாள் வரையில் தனது கமராவினால், யுத்தத்தை படம் பிடித்த அவர், 2009இற்குப் பின்னரான காலத்தில், தன் கண்களை மூடிக் கொண்டே இந்த மண்ணில் வாழ்ந்தார். சில வருடங்களில் புலம்பெயர்ந்தார். அவருடைய புலப்பெயர்வுக்குப் பின்னால் ஒரு உயரிய நோக்கம் இருந்தது.

புலம்பெயர்ந்த பின்னர், இறுதி யுத்தத்தில் நடந்த இன அழிப்புப் பகளின் புகைப்பட சாட்சியாளன் ஆனார். ஜெனீவா மாநாட்டில் தான் பிடித்த புகைப்படங்களை கண்காட்சியாக காண்பித்து அவர் ஒரு வகையான போராட்டத்தை முன்னெடுத்தார். உண்மையில் அவர் எதையும் பேசாமல் சொந்த மண்ணிலேயே வாழ்ந்திருக்க முடியும். ஆனால் போரினால் இன அழிப்பு செய்யப்பட்ட மண்ணில் அப்படி வாழ்ந்து கழிப்பது என்பது மனசாட்சிக்கு விரோதமானது என்பதனால் தன் வாழ்க்கையை கடலில் இருந்து தரையில் வீசிக் கொண்டார். இது ஒரு வகையானது. இந்த எழுத்தாளர் இப்பத்தியை எழுதுவதற்கான காரணம், கடந்த வாரம், அவுஸ்ரேலிய நாட்டில் இருந்து நடேசலிங்கம் என்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரும் அவரது மனைவி பிரியாவும் அவர்களின் இரண்டு மகள்களும் அந்நாட்டு அரசால் நாடு கடத்தப்பட்ட சம்பவம் உலகையே அதிர்வுக்கு உள்ளாக்கியுள்ளது. அவர்களின் புகலிடக் கோரிக்கைகளை மாத்திரம் கவனப்படுத்தவில்லை. ஈரான், குர்திஸ்தான், சிரியா போன்ற நாடுகளை சேர்ந்த பலர் அவுஸ்ரேலிய தீவுகளில் அகதிகளாய் சிறையிருக்கின்றனர். இது உலகத் துயரம். ஈழத் தமிழர்களின் பிரச்சினையும் அவ்வாறானதே.

இப்போது நாடு கடத்தப்பட்ட நடேசலிங்கம் குடும்பம் மீண்டும் நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ளவர்கள். போர் நிறைவடைந்த பின்னர் அதாவது 2010இற்குப் பின்னரான காலத்தில் நாட்டில் வாழ முடியாத நிலையில், நடேசலிங்கமும் பிரியாவும் அவுஸ்ரேலியாவுக்கு புலம்பெயர்ந்தனர். அங்கு அகதிகளாக கிறிஸ்மஸ் தீவில் வாழ்ந்த அவர்கள் மணம் முடித்தனர்.

அவர்களுக்கு தற்போது இரண்டு பெண் குழந்தைகளும் உள்ளனர். அவர்களை நாடு கடத்த அந்நாட்டு அரசு தீர்மானித்தது. தமது குழந்தைகளுக்காகவேனும் தமக்கு தஞ்சமளிப்பது குறித்து அவுஸ்ரேலியா பரிசீலிக்க வேண்டும் என்று நடேசலிங்கம் பிரியா தம்பதிகள் கோரினர். அதையும் நிராகரித்த அந்நாடு, அவர்களை கதறக் கதற பலவந்தமாக நாடு கடத்திய நிகழ்வு பலரையும் சோகத்தில் ஆழ்த்தியது. நீதிமன்றத்தின் இடைக்கால தடை—யினால் அவர்கள் தற்காலிகமாக அந்நாட்டு அகதிமுகாமில் தஞ்மடைந்துள்ளனர். அவர்களின் வழக்கு மீண்டும் எதிர்வரும் 18ஆம் திகதி எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

அவுஸ்ரேலிய அகதி முகாம்களில் பல ஈழத் தமிழர்கள் நாடு கடத்தும் அபாயத்துடன் வாழ்கின்றனர். அவர்களில் பலரும் தாயகத்தில் இருந்து பல்வேறு அச்சுறுத்தல்களினால் நாடு பெயர்ந்ததவர்கள். போர் முடிவுக்கு வந்த பின்னர், முன்னாள் போராளிகள், பொதுமக்களை அச்சுறுத்திய அரசு, அவர்களின் நிலங்களையும் இருந்த சொத்துக்களையும் பறித்துக் கொண்டு அவர்களின் படகுகளில் ஏற்றி புலம்பெயர வைத்தது. மீண்டும் அவர்கள் நாடு திரும்ப முடியாது. அச்சுறுத்தல் ஒரு புறம். இனியவர்கள், நாடு திரும்பி வாழ்வதற்கு எந்தவொரு ஆதாரமும் இங்கே இல்லை. வேரோடு சிங்கள அரசு பிடுங்கி எறிந்து விட்டது.

ஈழத்தில் இன்னமும் அச்சுறுத்தல் உள்ளதா? அங்கிருந்து இப்போதும் படகு வழியாகவும் விமானங்கள் வழியாகவும் தமிழர்கள் தப்பிச் செல்கிறார்களே? பொருளாதார நோக்கிலா இப்படி செய்கிறார்கள்? என்று அண்மையில் ஒரு தமிழக எழுத்தாளர் கேட்டார். புலம்பெயர் தமிழர்கள் பணம் படைத்தவர்கள், ஆடம்பரத்திற்காக புலம்பெயர்வர்கள் என்றொரு பார்வையும் சிலரிடம் இருக்கிறது. தாய் மண்ணை பிரிந்த புலம்பெயர்ந்த ஒருவருடன் பேசி, அவரின் அழுத்தமான வார்த்தைகளை உணர்ந்த ஒருவரால் இப்படி கேட்க முடியாது என்று அவருக்கு சொன்னேன்.



அண்மையில், கிளிநொச்சி பளையில் வைத்திய அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வைத்தியர் சிவரூபன். போர் காலத்தில் மக்களுக்காக தன் உயிரை பொருட்படுத்தாது வைத்திய சேவை செய்தவர். அவர் புலிகளை மீள உருவாக்க ஆயுதம் வைத்திருந்தார் என்று கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நிகழ்வு ஒன்றே ஈழத்தின் இன்றைய நிலமையை நன்றாக எடுத்துரைக்கிறது. ராஜபக்சே இல்லை. சிறிசேனவும் ரணிலும் ஆட்சி செய்கின்றனர். ஆனாலும் நிலமை ஒன்றுதான். சிவரூபன், போர் முடிந்த பிறகு புலம்பெயர்ந்திருந்தால் இன்றைக்கு அவர் விசாரணை சிறையில் இருந்திருக்கத் தேவை—யில்லை.

இப்போது, ஈழத்தில் இருக்கும் மக்களிடம் நீதிக்கான ஏக்கமும் ஏமாற்றங்களும்தான் இருக்கின்றன. சொந்த நிலத்தில் வாழ வேண்டும், எமக்காக போராடிய பிள்ளைகளுக்கு விளக்கேற்றி கண்ணீர் விட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்ப வேண்டும் என்ற கனவுகளும் ஏக்கங்களும் மாத்திரமே உள்ளன. இவைகளும் வெறுமைகளும்தான் எம்மிடம் உள்ளன. ஆனால் இந்த மக்களிடம் பீரங்கிகள் உள்ளன. துப்பாக்கிகள் உள்ளன. காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளையை தேடும் தாயிடம் தற்கொலை குண்டுதாரியின் அங்கி இருந்தது என்றெல்லாம் சொல்லக்கூடிய நாட்டிலும் காலத்திலும் நாம் வாழ்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட அண்ணை கேட்ட விபூசிகா தன் தாயை பிரிந்து, சிறார் இல்லத்தில் அடைக்கப்பட்டதும், தாயார் பாலேந்திரன் ஜெயக்குமாரி சிறையில் அடைக்கப்பட்டதும், மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் துயரங்களை திரட்டி வவுனியா சண் மாஸ்டர் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, நாட்டை விட்டு விரட்டப்பட்டதும், தமிழ் எம்பிக்களை கொலை செய்ய முயன்றார்கள் என்று அப்பாவி முன்னாள் போராளிகள் பலர் கைது செய்யப்பட்டதும் இலங்கை தீவில் போருக்குப் பிறகு நடந்த வெகு சில நிகழ்வுகள்தான்.

நாட்டை விட்டு துரத்துதல், புலம்பெயரச் செய்தல் என்ற வடிவிலும் இனத்துடைப்பு நடக்கிறது. தாயத்தில் நீதியை நிலைநிறுத்தி, ஈழத் தமிழர்கள் உரிமையுடன் கூடியதொரு வாழ்வை வாழுகின்ற காலம் திரும்புகையில் உலகின் எந்த அரசிடமும் ஈழத் தமிழர்கள் தஞ்சம் கோரமாட்டார்கள். தமது தாயகத்திற்கு திரும்புவார்கள். இலங்கை அரசு முன்னெடுக்கும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு அஞ்சி புகலிடம் தேடும் அகதிகளை மீண்டும் இனச் சிறைகளுக்கு தள்ளுகின்ற செயற்பாடு உலக ஜனநாயகத்திற்கு விரோதமானது. மனித உரிமைகளுக்கும் மனித மாண்புக்கும் எதிரானது.

# பத்து ஆண்டுக்கான திட்டங்கள்

பிரபஞ்சத்தின் பிற பகுதிகளில் குடியேறினால் மட்டுமே பூமியிலுள்ள மனித இனமும் இன்ன பிற உயிரினங்களும் தப்பிப் பிழைக்க முடியும் என்பது உறுதியாகிவிட்டது. வேற்று கிரக குடியேற்றத்துக்கு அவசியமான முன்னேற்பாடுகள் மேற்கொள்ள அமெரிக்காவின் நாசா உள்ளிட்ட உலகின் பல விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

பிரபஞ்சத்தின் தோற்றம் முதலான வரலாற்றை படம் பிடிக்கவும், மற்றும் பிரபஞ்சத்தின் கருப்பு பருப்பொருள், ஆற்றல் ஆகியவை இருக்கும் இடங்களை அடையாளம் கண்டு சுட்டிக்காட்டும் வரைபடத்தை உருவாக்கவும் நாசாவுக்கு திட்டம் உள்ளது என்று கூறப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளுக்கான நாசாவின் மிகப்பெரிய திட்டங்கள் பின்வருமாறு:

## பார்க்கர் சோலார் திட்டம்

2018—ம் ஆண்டு சூரியனை நோக்கி செலுத்தப்பட்ட சோலார் பார்க்கர் விண்கலம் சூரியனை 24 முறை சுற்றி வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது. சூரியப் புயல்கள் பூமியையும், நம்முடைய தொழில்நுட்பங்களையும் அழித்துவிடாமல் காக்க உதவும் என்று கூறப்படுகிறது.

## செவ்வாய் கிரகத்தில் இன்சைட் லேண்டர்

2018—ம் ஆண்டு செவ்வாயை நோக்கி அனுப்பப்பட்டது. தற்போது அங்கு நிகழும் பூகம்பங்கள் பற்றி ஆய்வு செய்து வருகிறது. இதன் மூலம் செவ்வாயின் உட்கட்டமைப்பு குறித்த தகவல்கள் வெளிச்சத்துக்கு வரும்.

## மார்ஸ் 2020 ரோவர்

2020 ஜூலை மாதம் செலுத்தப்பட இருக்கும் இந்த ரோவர் பிப்ரவரி 2021—ல் செவ்வாயில் தரை இறங்கி அங்கு ஏலியன் உயிர்கள் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்யும். மேலும் மனிதர்கள் செவ்வாயின் நிலத்தில் நடக்க உதவும் தொழில்நுட்பத்தை உருவாக்க இந்த ரோவர் உதவும்.

## செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம்

கடந்த வருடம் நிலவுக்கு விண்வெளி ஆய்வாளர்களை மீண்டும் அனுப்பி அங்கு மனித குடியேற்றத்துக்கான தளவாடங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக நாசா அறிவித்தது. அதற்கு அடுத்தடுத்த வருடங்களில், செவ்வாய் கிரகத்துக்கும் மனித ஆய்வாளர்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## யூரோப்பா நிலவுக்கு பயணத் திட்டம்

இந்த வருடம் ஜூன் மாதத்தில், அணு சக்தியின் உதவியுடன் பறக்கும் திறனுள்ள ஒரு ஹெலிகாப்டரை சனி கிரகத்தின் நிலவான டைட்டன் மீது பறக்கவிட்டு அங்கு ஏலியன் உயிர்கள் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்ய உள்ளதாக நாசா அறிவித்தது. அதுமட்டுமல்லாமல், வியாழன் கிரகத்தின் நிலவான யூரோப்பாவில் உயிர்கள் இருக்கின்றனவா என்றும் தேடும் திட்டமும் இருப்பதாக கூறப்படுகிறது.

## நிலவில் இருந்து செவ்வாய் கிரகத்துக்கு விண்வெளியாளர் பயணம்

வருகிற 2030—களில் நிலவுக்கு செலுத்தப் படுவதாக திட்டமிடப்பட்டுள்ள நிலவுப் பயணமானது, நிலவு மற்றும் செவ்வாயில் உள்ள பொருட்களை வைத்து அங்கு வாழத் தேவையான வசதிகளை உருவாக்கிக்கொள்ள முடியுமா என்ற பரிசோதனை மேற்கொள்ளும் திட்டம் என்று கூறப்படுகிறது.

## கியூப் சாட் நானோ தொழில்நுட்ப செயற்கைக்கோள் ஆய்வுத்திட்டங்கள்

அமெரிக்காவில் உள்ள சுமார் 93 நிறுவனங்களுடன் இணைந்து நான்கு அங்குல நீள அகலம் கொண்ட ‘கியூப் சாட்’ (Cube-Sat) வகை செயற்கைக்கோள்கள் மூலமாக செயல்படுத்த மொத்தம் சுமார் 176 திட்டங்களை வைத்திருக்கிறது நாசா. உதாரணமாக, வருகிற 2020—ம் ஆண்டு, நிலவின் தென் துருவத்தில் ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பிரபஞ்சத்தின் உயிர்கொண்ட கோள்கள் ஆய்வு 2021: இன்ப்ரா ரெட் தொழில்நுட்பம் மற்றும் சுமார் 18 கண்ணாடிகள் கொண்ட நாசாவின் ஜேம்ஸ் வெப் டெலஸ்கோப் உதவியுடன் நம் பிரபஞ்சத்தில் உள்ள உயிர்கொண்ட கோள்கள், முதல் விண்மீன் மண்டலங்கள் மற்றும் நட்சத்திரங்களின் தோற்றம், கோள்கள் பிறக்கும் விதம் ஆகிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சைக் (Psyche) கோள் குறித்த ஆய்வு 2022

பூமியைப்போல தன்னுள்ளே இரும்பு மற்றும் நிக்கெல் ஆகியவற்றைக் கொண்ட ‘சைக்’ எனும் கோளில் ஆய்வு செய்தால் நம் சூரிய மண்டலத்தின் தொடக்ககால வருடங்கள் குறித்த குறிப்புகளைக் கண்டறியலாம் என்கிறார் நாசா ஆய்வாளர் லிண்டா எல்கின்ஸ். இதற்காக ஒளியின் உதவியுடன் தகவல்களை அனுப்பும் ஒரு புதிய வகை விண்கலத்தை வருகிற 2022—ம் ஆண்டு நாசா அனுப்பவுள்ளது.

## டைட்டன் நிலவுக்கு பயணத் திட்டம் 2026

சனி கிரகத்தின் நிலவான டைட்டன் பனிக்கட்டி, திரவ மீத்தேன் குளங்கள் மற்றும் அடர்த்தியான நைட்ரஜன் வாயுவால் ஆன வளி மண்டலம் ஆகியவற்றைக் கொண்டது. டைட்டனுடைய பனிக்கட்டி மேற்பரப்புக்கு கீழே சுமார் 60 மைல் ஆழத்தில் திரவத் தண்ணீர் இருக்கலாம் என்று கருதுகிறார்கள் விஞ்ஞானிகள். அதனால் அங்கு ஏலியன் உயிர்கள் இருக்கலாம் என்றும், அதனைக் கண்டறிய தன்னைத்தானே உந்தித் தள்ளிக்கொள்ளும் தும்பி என்று அழைக்கப்படும் ஒரு விண்கலத்தை வருகிற 2026—ம் ஆண்டு அனுப்பி டைட்டனில் ஆய்வுகள் மேற்கொள்ள நாசா திட்டமிட்டுள்ளது. மொத்தத்தில் அடுத்த பத்து ஆண்டுகளில் நம் பிரபஞ்சம், நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் குறித்த பல அரிய மற்றும் அதிசயமான உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் என்பது உறுதி.

# காட்டுத் தீயை தடுக்கும் ஆடுகள்



அமேசான் காட்டுத் தீ சமூக ஆர்வலர் மனங்களில் துன்பத்தீயை பற்ற வைத்தது. அதிவேகத்தில் பரவும் காட்டுத் தீயை அணைக்க குட்டி ஹெலிகாப்டர்கள், விமானங்கள் என இன்று பல்வேறு தொழில்நுட்ப யுத்திகள் உள்ளன. செலவு மிக்க இந்த வசதிகளுக்குப் பதிலாக காட்டுத் தீயை கட்டுப்படுத்த ஆடுகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது போர்ச்சுக்கல்.கடந்த சில ஆண்டுகளில் காட்டுத்தீயால் பெரும்பாதிப்புகளை எதிர்கொண்ட அந்த நாடு இந்த நடவடிக்கையில் இறங்கி இருக்கிறது. இதற்காக காட்டுத் தீ பற்றுவதற்கான காரணங்கள் ஆராயப்பட்டது. ஸ்ட்ராபெர்ரி மரங்களின் இலைகள் காய்ந்து சருகானால் எளிதில் தீப்பற்ற காரணமாகிறது என்பது தெரியவந்தது. இது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் சிறந்த உணவாக கருதப்படுகிறது. எனவே 40 முதல் 50 ஆடுகள் கொண்ட சுமார் 150 ஆட்டுமந்தைகள் உருவாக்கப்பட்டு தீப்பற்றும் வாய்ப்புள்ள பகுதிகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. சுமார் 11 ஆயிரம் ஆடுகள் இந்த பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் கால்நடை வளர்ப்பு பெருகுவதுடன், காட்டுத் தீ கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உரமாகும் சிறுநீர்



எதற்கும் பயனில்லாத கழிவாகத் தான், இன்றும் மனித சிறுநீரை உலகம் பார்க்கிறது. ஆனால், சிறுநீரில் இருக்கும் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற செறிவான சத்துக்கள், நல்ல உரமாக இருக்க முடியும் என்கிறது, அறிவியல். இதை நடைமுறைப்படுத்த, ஐரோப்பிய கடல் கண்காணிப்பு அமைப்பு (இ.ஓ.ஓ.எஸ்.,) குளியலறை கலன்களை தயாரிக்கும் லாபென், சுவிட்சர்லாந்து நீர் ஆராய்ச்சி நிலையம் (இ.ஏ.டபிள்யூ.ஏ.ஜி.,) ஆகிய மூன்று அமைப்புகளும் கூட்டாக ஆராய்ந்தன.

இறுதியில், கழிப்பிடங்களில் சிறுநீரை மட்டும் பிரித்து, மடைமாற்றிவிடும் கலனை லாபென் மற்றும் இ.ஓ.ஓ.எஸ்., ஆகியவை வடிவமைத்தன. ஒருவர் சிறுநீர் கழித்ததும், கலனை சுத்திகரிக்க வெறும், 1.5 லிட்டர் தண்ணீரே போதும். கலனிலிருந்து பிரித்தெடுத்த சிறுநீரை, கிருமிகள் இன்றி சுத்திகரித்து, உரத்திற்கு தேவையான சத்துக்களை வடிகட்டும் கார்பன் வடிகட்டிகளை இ.ஏ.டபிள்யூ.ஏ.ஜி., உருவாக்கியது.

இந்த முறையில் தயாரிக்கப்படும் உரத்திற்கு, 'ஆரின்' என, பெயரிட்டுள்ளனர்.ஆரின் உரத்தை எல்லா வகை செடிகளுக்கும் போடலாம் என, சுவிஸ் அரசின் வேளாண்மைத் துறை, சான்று வழங்கியிருக்கிறது. பொதுக் கழிப்பிடங்களை உரத் தொழிற்சாலையாக மாற்றும் இந்த திட்டம், நம் ஊருக்கும் வருமா?